விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 05 சனிக்கிழமை (21.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நாடாளுமன்ற சிறப்புரிமை குறித்து சரத் பொன்சேகா மீண்டும் கேள்வி



(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்புரிமை தொடர்பாக மீண்டும் கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இந்தியத் துணைத் தூதரகம் உத்தியோகபூர்வமாக அரசுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்தியாவின் தனித்தனித் துணைத் தூதரகங்கள் அமைக்கப்படவுள்ளமை குறித்து இலங்கை அரசுக்கு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் சி.ஆர்.ஜெயசிங்கவுக்கு இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா இச்செய்தியை சம்பிரதாயபூர்வமாக அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் துணைத் தூதரகம் மூலம் நன்மைகளை அடைவார்கள் என்றும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவிருக்கும் துணைத் தூதரகம் மூலம் நன்மைகளை அடைவார் (16 ஆம் பக்கம் பார்க்க)

# செப்ரெம்பர் மாத இறுதிக்குள் மீள்குடியேற்றம் பூர்த்தியாகும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த மாதத்திற்குள் யுத்த அகதிகள் அனைவரும் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு விடுவர் என்று அரசு அறிவித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்குப் பொறுப்பான விடயங்களுக்கு ஜனாதிபதியின் ஆலோசகராகப் பதவி வகிக்கும் சந்திரா பெர்னாண்டோ நேற்று ஊடகவியலாளர்களிடம் இதனைக் கூறியுள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## எம்.வி. சன் சீ கப்பல் கப்டனுக்கு விடுதலைப்புலிகளுடன் தொடர்பு

### பேராசிரியர் றொகான் தெரிவிப்பு



(கொழும்பு)

கனடாவைச் சென்றடைந்த சன் சீ கப்பலின் கப்டனுக்குப் புலிகள் அமைப்புடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாகச் சிங்கப்பூரில் உள்ள பயங்கரவாதம் தொடர்பான நிபுணர் பேராசிரியர் றொகான் குணரத்தினாவை மேற்கோள் காட்டி மலேமெயில் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப் பத்திரிகைக்குப் பேராசிரி (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கி பறிமுதல்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பறித்துக் கொண்டு தப்பிச் சென்ற சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலத்திற்கு முன்னால் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் நடந்து சென்று கொண்டிருந்த போது அவர்களில் ஒருவரின் துப்பாக்கியைப் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் காந்தி பேச்சைக் கேட்டிருந்தால் தமிழர்கள் அழிந்திருக்க மாட்டார்கள்

### தமிழகக் காங்கிரஸ் கட்சி விளக்கம்

(சென்னை)

ராஜீவ் காந்தி பேச்சை கேட்டிருந்தால், இலங்கைத் தமிழர்கள் இவ்வளவு பேர் அழிந்திருக்க மாட்டார்கள். இலங்கையில் 18 ஆண்டுகளுக்கு முன்னரே அமைதி திரும்பியிருக்கும் எனத் தமிழகக் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர் கார்த்தி சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இலங்கைப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதே கிடையாது. இந்தியாவில் பல மொழி பேசுபவர்கள் ஒற்றுமையாக இருக்கின்றார்கள். அதுபோல இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகள் பேசும் மக்கள் ஒற்றுமையாக இருக்கக் கூடாதா? என்று ராஜீவ் காந்தி கூறினார். இதில் என்ன தவறு இருக்கின்றது? (16 ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வின் சில்வாவிடம் ஒழுக்காற்று விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழு முன்னிலையில் நேற்றுக் காலை சாட்சியமளித்தார்.

இக் குழு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் கூடியது. கட்சியின் விதிமுறைகளை மீறி முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா செயற்பட்டாரா? என்பது தொடர்பாக விசா (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் காய் நகர்த்தல்களால் இந்து சமுத்திரத்தின் அமைதிக்குப் பங்கம்

### உருத்திரகுமாரன் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையினையும் வாய்ப்பினையும் ஈழத் தமிழர்களிடமிருந்து பறித்தெடுத்த இலங்கை அரசு தற்போது இந்திய மீனவர்களையும் அக் கடற்பரப்பினைப் பயன்படுத்த விடாமல் தடுப்பதும் சீன நிறுவனங்களுக்கு அக் கடற்பரப்பிலும் கரையோரங்களிலும் செயற்பட அனுமதிப்பதும் இந்து சமுத்திரத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதன்மை நிறைவேற்றுநர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இதனையிட்டு இந்திய ஆட்சியாளர்களும் தமிழக அரச தலைவர்களும் கொண்டிருக்கக் கூடிய நீண்ட (16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இவ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை தாங்கினார்.

இச் சமயம் யாழ்.பிரதேச செயலாளர் திருமதி தெய்வேந் (16 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்களுக்கு புகலிடம் வழங்க 35 சதவீதமான கனேடியர்கள் விருப்பம்

(ரொரன்டோ)

எம்.வி.சன்.சி. கப்பலில் கனடாவைச் சென்றடைந்திருக்கும் ஈழத் தமிழர்களுக்கு புகலிடம் வழங்கப்படவேண்டும் என 35 சத வீதமான கனேடியர்கள் விரும்புகிறார்கள் என்று அங்கு இடம்பெற்றிருக்கும் கருத்துக் கணிப்பு ஒன்றின்மூலம் தெரியவந்துள்ளது.

ஆயினும் புகலிடம் வழங்கவே கூடாது என்று 48 சதவீதமானவர்கள் விரும்புகிறார் கள் என இக்கணிப்பீட்டு முடிவில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இத்தமிழர்கள் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு அற்றதாகக் கூட இருக்கலாம் ஆனால் இவர்களுக்கு புகலிடம் வழங்கவே கூடாது என்பது இவர்களின் நிலைப்பாடாக உள்ளது. (ச-5)




# GIT பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரம் 2011 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கு பொதுத்தகவல் தொழில்நுட்பப் பாடப்பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளதால் அவர்களுக்கு அனுமதி அட்டைகள் நாளைமறுதினம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படும் என யாழ்.மத்திய கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ச)


# மணல் சேவையில் ஈடுபடும் பாரவூர்திகளுக்கான கலந்துரையாடல்

மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக மணல் விநியோகத்தில் பாரவூர்திகளை மேலதிக சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 24.08.2010 (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்து சிறப்பிப்பார்.

மணல் சேவையில் ஈடுபடும் அனைத்து வாகன உரிமையாளர்களும் மணல் சேவையில் ஈடுபடுவதற்காக பாரவூர்தி சங்கங்களில் பதிவுகளை மேற்கொண்டுள்ள அனைவரும் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

த.றஜீவ்
செயற்திட்ட இணைப்பாளர்
மகேஸ்வரி நிதியம்

(C-904)



union assurance
Trust in your tomorrow, today.

# உடனடி வேலை வாய்ப்பு

ஆசியாவில் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முழுமையான பக்கபலத்துடன் இயங்கும் இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான

**UNION ASSURANCE PLC**

அதன் சாவகச்சேரி கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு, தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்படவுள்ளது.

❖ பதவி வெற்றிடங்கள்

1. FINANCIAL ADVISORS
2. PERSONAL FINANCIAL ADVISORS
3. SENIOR PERSONAL FINANCIAL ADVISORS
4. PERSONAL FINANCIAL MANAGERS
5. SENIOR PERSONAL FINANCIAL MANAGERS

❖ தகைமை

⇨ G.C.E. O/L with Maths
⇨ காப்புறுதி தொழிலில் முன் அனுபவம் விரும்பத்தக்கது. (முக்கியம் அல்ல)
⇨ சர்வதேச தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படும்.
⇨ கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவு
⇨ தென்மராட்சி , கிளிநொச்சி பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

❖ நேர்முகத் தேர்வு

காலம் :- 23.08.2010 (திங்கட்கிழமை)
நேரம் :- 9.30 AM
இடம் :- லிகோரியார் தேவாலயம், கச்சாய் வீதி, சாவகச்சேரி.

T.P.No :- 077772772 / 0770253533

(2227)


# ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக திங்களன்று விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இடமாற்றம் தொடர்பாக அண்மையில் அறிவுறுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் அமைந்துள்ள சயன்ஸ்ஹோல் கல்வி நிறுவனத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க விரும்புவர்கள் தங்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை எழுத்து மூலம் சமர்ப்பிப்பதோடு அதற்கான வலுவான காரணங்களையும் ஆவண மூலம் உறுதிப்படுத்திக் கொண்டுவருமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ந.குலநாதன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி அன்று வடக்கு மாகாணசபையில் கூடுகின்ற இடமாற்ற சபைக்கூட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் அழைக்கப்பட்டுள்ளதால், இடமாற்றசபையில் முன்வைக்கப்படும் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கு முகமாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்வதோடு உரிய ஆவணங் களையும் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களும் பங்குகொள்ளவுள்ளனர். (ச)

# கண்டி மேலதிக நீதிபதி ரொஹான் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

கண்டி மேலதிக நீதிபதி ரொஹான் ஜயவர்த்தன சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்நீதிபதி தொழில்சார் பணிகளில் அசட்டையாகச் செயற்பட்டமையே இதற்குக் காரணம்.

பொதுமக்களிடமிருந்தும் சட்டத்தரணிகளிடமிருந்தும் அவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்நீதிபதியின் செயற்பாடுகள் குறித்து பிரதம நீதியரசர் அசோக்க டி சில்வா செய்த புகாரை அடுத்து இது தொடர்பாக விசாரிப்பதற்கு உயர்நீதி மன்ற நீதிபதி எஸ். ஐ.இமாம், நீதி சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண ஆகியோரை நீதிசேவை ஆணைக்குழு நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விசாரணைகளின் மூலம் முக்கிய தீர்ப்புக்கள் பலவற்றை வழங்குவதில் வேண்டுமென்றே தாமதம் செய்தமை உட்பட பல விடயங்களில் அவர் குற்றவாளியாகக்காணப்பட்தாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை வேறு பல நீதிபதிகள், நீதவான்களுக்குஎதிராகபல்வேறு முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பாக நீதிச்சேவைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது எனவும் மேற்படி பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-3,5)

# மாட்டு வண்டி சவாரிப் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொத்துத்துறை சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (ச-3)






## போய் கொண்ட கங்கம்மா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை சோதிட வல்லுனர்

கே.ரவிக்குமார் சாஸ்திரி
0770790898

கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை

**குறைந்த செலவில் கூறுவார்**

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினைகள், விசேட பயணம், எதிரிகள் கண் திருஸ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல்.

இவற்றினை தெரிந்து கொள்ள ஒரு முறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

திலக் லொச் அறை இல: 01
711, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி சந்தி)

கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.30 மணிவரை

(2226)



# VACANCY

உடனடி வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர்கள் தேவை.

(Office Assistant - Female)

Qualifications :- O/L or A/L Passed
(And Computer Knowledge )
(Ms Office, DTP, Accounting Packages)

Basic Salary :- Rs.5000/=

நேர் முகத்தேர்வு :- 23/08/2010

காலை 11 மணிதொடக்கம் 2 மணி வரை எமது நிறுவனத்தில் நடைபெறும். உங்கள் கல்வித் தகமையுடன் கீழே உள்ள எமது நிறுவனத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

UNI - ICT Campus - No -83, Palaly Road, Kantharmadam, Jaffna - T.P :- 0777 110 862



## வீடும் காணியும் விற்பனைக்கு

இல.10, தாவடி வீதி, மானிப்பாயில் (IDM கணனி நிறுவனத்துக்கு எதிராக) அமைந்துள்ள 05 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு.

தொலைபேசி இலக்கம்
0772389864

(2210)



## சாரதி நேர்முகத் தேர்வு

31.07.2010 சனிக்கிழமை விளம்பரத்தின்படி தொடர்பு கொண்டவர்களும் தொடர்பு கொள்ளாதவர்களும் வருகின்ற 24.08.2010 செவ்வாய் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 1.30 மணிவரை உடுப்பிட்டி தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு வரவும். வருபவர் கள் சாரதி அனுமதிப்பத்திர நிழற்பிரதி, கிராம சேவையாளர் சான்றிதழ், சாரதியாக சேவையாற்றிய சான்றிதழ்களுடன் சமுகம் தரவும். யாழ். வீதி 15ம் கட்டை உடுப்பிட்டி சனசமூக நிலையத்துக்கு அண்மையில். (2219)

## இன்று ஒரு தகவல்

# சிரிப்பு வைத்தியம்

நன்றாக. சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் உங்களுக்கு நோய் வராது.

இது நாம் பல காலமாக சொல்லிக் கொண்டிருக்கும் ஒரு செய்திதான். இருந்தாலும் இப்பொழுது டாக்டர் களே அதை மிகவும் வலியுறுத்திச் செல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

சிரிப்பு என்பது நோய் வராமல் தடுப்பது மட்டுமல்ல. நோய்களைக் குணமாக்கவும் செய்கிறதாம். அதனால் தான் இன்றைக்கு நவீன மருத்துவ முறைல சிரிப்பை நோய்களை குணமாக்கும் நோய்வராமல் தடுக்கும் ஒரு முறையாக அங்கீகரித்திருக்கிறது.

ஆம்ஸ்டர்டாம் நகரத்தில் 'தயான் ஆட்டோரியால்' என்ற டச்சு டாக்டர் இருந்தார். அவர் ஒரு சிரிப்பு மையம் ஆரம்பித்து பயிற்சியளித்து வருகின்றாராம்.

அந்த டாக்டர் தன்னுடைய சிரிப்பு மையத்தில் தொடர் ந்து மூன்று வாரம் சிரிப்பு வைத்தியம் கொடுக்கிறாராம். அதன்பின் ஒரு "அகநிலை உணர்வு ஆய்வு" எடுக்கி றாராம். அந்த test க்கு என்ன பெயர் தெரியுமா? Spirlbergers state trait Anger inventory Test பலரிடம் இது போன்று ஆய்வு செய்து பார்த்தார்களாம். சிரிப்பு வைத்தியம் செய்தபிறகு அவர்களில் பலருக்கு கோபத் திளைவு மிக குறைந்து போயிருந்ததாம். சிரிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து British Journal of the Royal College of General Paractitioners இப்பயிற்சி மையத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது. அதனால் இனிமேல் சிரிப்பும் ஒரு வைத்தியம் தான். அல்லோபதி, ஹோமியோபதி போன்று இது Humouropathy

மன அழுத்தமானது பல விதமான நோய்களை உண்டாக்கும்.

உயர் இரத்த அழுத்தம், இதயநோய்கள், வயிற்றுப் புண், மனஉளைச்சல், நரம்ப சம்பந்தமான கோளாறுகள்... இப்படி பலவித நோய்கள் மனஅழுத்தம் காரணமாகத் தோன்றக் கூடியவை. சில நேரங்களில் புற்றுநோய் உருவாக்கக் கூடிய அபாயம் கூட உண்டாம்.

இதற்காகத் தான் மன அழுத்தத்தை விரட்ட வாய் விட்டுச் சிரிக்கச் சொல்கிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நகைச்சுவை மூலமாக நோயைக் குணப்படுத்துவதற்கு சிரிப்புச் சிகிச்சை என்ற முறையை உருவாகியிருக்கிறார்களாம்.

இன்னும் சில நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? சிரிக்கும் போது இரத்த ஓட்டம் அதிகமாகிறதாம் சமிபாட்டுசக்தி அதிகரிக்கிறதாம்.

இரத்தத்தில் சர்க்கரை சத்து விரைவில் கரைகிறதாம். குலுங்கி குலுங்கிச் சிரிப்பவர்களுக்கு பெரும் பலாலும் குடல் நோய் வருவதில்லையாம். சிரிக்கும் போது நுரையீரல்களில் அதிகப்படியான பிராணவாயு உட்செல்கிறதாம்.

சிரித்து மகிழ்ச்சியாக இருப்பது ஜலதோஷத்துக்கும் முகப்பருவுக்கும் சிறந்த மருந்து என்று கூட ஒரு மருத் துவக் குறிப்பு உண்டு.

அதனால் எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருங்கள். அதுதான் நல்லது.

ஒரு அம்மா அவசரமாக டாக்டரிடம் ஓடிவந்தார்.

"டாக்டர், எங்க வீட்டுக்காரர் உலக சாதனை செய்ய வேண்டுமென்பதற்காக 15 நாட்கள் இடைவிடாமல் சிரித்து பரிசு வாங்கியிருக்கிறார்" என்றார் பதட்டமாக.

"அது நல்ல செய்தி தானே! அதற்காக ஏன் இப்படி பதட்டமாக அதைச் சொல்கிறீர்கள்?" என்றார் டாக்டர்.

"பரிசு வாங்கி 15 நாளாகி விட்டது டாக்டர். இன்னமும் சிரிப்பை நிறுத்தவில்லை. அதுதான் சந்தேகமாக இருக்கிறது" என்றார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கைவிடப்பட்ட வாகனங்களை உரிமையாளரிடம் மீள வழங்குவதற்கான நடமாடும் சேவை

கடந்த யுத்த காலத்தில் பொது மக்களினால் கைவிடப்பட்டு, கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தில் உள்ள 100ற்கும் மேற்பட்ட வாகனங்களையும் 7ஆயிரத்து 500ற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களையும் இலகுவாக உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை வழங்கி உதவுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் பணிப்பின் கீழ் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்நாயகம் பி.டி.லலித்தர்மப்பிரியவின் ஏற்பாட்டில் எஸ்.ஏ. பிரேமரத்ன தலைமையில் 20 பரீட்சகர்கள் அடங்கிய குழுவினர் இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரு தினங்களும் விசேட நடமாடும் சேவையினை மேற்கொள்ளவுள்ளார்கள்.

இச்சேவையின் போது பொது மக்களினால் கைவிடப்பட்ட வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்கள் இனம் காணப்படுவார்கள். அத்துடன் இதுவரை பொது மக்களினால் இனம் காணப்பட்வற்றில் பதிவுசெய்யப்படாதவை தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.

எனவே வாகன தரிப்பிடத்தில் ஏற்கனவே உரிமையாளர்களினால் இனம் காணப்பட்டு பதிவு தொடர்பான பிரச்சினையினால் கையளிக்கப்படாது உள்ளவற்றின் உரிமையாளர்கள் குறிப்பிட்ட நாட்களில் வருகை தந்து தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (6)

# சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பதவிக ளுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிகளுக்கு தகை மைகளைக் கொண்ட விண்ணப் பதாரர்கள் தமது விண்ணப்பங்களை செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்பதாக செயலாளர் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு -07 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தகைமைகள் மற்றும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தினை மாவட்டச் செயலகத்திலும் மற்றும் சகல பிரதேச செயலாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் பார்வையிடலாம் என யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (6)

## இராசி பலன்

*21.08.2010*
*(ஆவணி 5, சனிக்கிழமை)*
*துவாதசி மாலை 5.50 மணிவரை*
*பூராடம் பிற்பகல் 3.24 மணிவரை*
*இராகுகாலம் 9.05-10.35 மணிவரை*
*சுபநேரம் 3.05-4.35 மணிவரை*

**மேடம்** பிரயாணத்தின் மூலம் நன்மை கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் கிடைக்கும், தந்தை வழி உறவினர்களால் அனுகூலம் கிட்டும், இறை வழி பாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** பிரயாணங்களில் அவதானமாக நடந்து கொள்வது நல்லது, தேவையற்ற விடயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது, செலவுகளுக்கு பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

**மிதுனம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், பணப்பற்றாக்குறை நீங்கும், ஆரோக்கியம் சீராகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**கடகம்** பகைவராக இருந்தவர்கள் மனம் மாறுவர், சரீரப் பிரயாசையில் தொழில் வளர்ச்சி காண்பீர்கள், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**சிங்கம்** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வ புண்ணிய கருமங்களில் ஈடுபடுவீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**கன்னி** தாய்வழி உறவினர்கள் மூலம் அனுகூலம் கிட்டும், பேச்சில் கனிவு காணப்படும், வாகனத்தின் மூலம் சுகம் கிடைக்கும், வியப்பூட்டும் செய்தி ஒன்று வந்து சேரும்.

**துலாம்** சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும், பேச்சில் வசீகரம் காணப்படும், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** சொத்துக்கள் தொடர்பாக எடுத்த முயற்சிள் வெற்றி தரும், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும், புதிய இடமாற்றத்தை எதிர் கொள்வீர்கள்.

**தனுசு** தெய்வதரிசனத்தில் நாட்டம் அதிகரிக்கும், பித்த சம்பந்தமான ரோகநிலை ஏற்படலாம், விமர்சனங்களை மறந்து செயற்பட வேண்டும், உடல் நலம் சீராகும்.

**மகரம்** அலங்காரப் பொருட்கள் வாங்குவதில் நாட்டம் கொள்வீர்கள், திடீர் பயணங்கள் மூலம் நன்மையுண்டாகும், பிறருக்கு உதவி செய்யும் நிலை தோன்றும்.

**கும்பம்** உறவினர்கள் மூலம் ஒத்துழைப்பு கிடைக்கும், பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் உண்டாகும், தொழில் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடங்குவீர்கள், பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படும் நாள்.

வளவன்

# வாடிக்கையாளர் சேவை நிலையத் திறப்பு


(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் வங்கிச் சேவைகள் விரிவுபடுத்தும் வகையில் மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளையின் புத்தூர் சேவை நிலையமும் வல்வெட்டித்துறை கிளையின் உடுப்பிட்டி சேவை நிலையமும் நாளை காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ கருணாஜீவவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான பி.வி.பத்திரண, பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் நிறைவேற்று அதிகாரி குமாரகே மற்றும் உயரதிகாரிகளும் கலந்து கொள்வர். (ச-3)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | . 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 70 |
| தக்காளி | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 90 |
| கரட் | 100 | 90 | 110 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 30 | 30 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 |
| பாகற்காய் | 90 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 30 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 50 |
| பயற்றங்காய் | 140 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 30 | 40 |
| கறிமிளகாய் | 70 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 |
| போஞ்சி | 100 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20-25 | 20-25 | 25 |
| தேசிக்காய் | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30-35 | 35 |


யுனிசெப் நிறுவன நிதி அனுசரணையுடன் சொண்ட் நிறுவன மிதிவெடி அபாயக் கல்வி செயற்திட்ட பிரதேச ரீதியான தொண்டர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நாவலர் கலாசார மணிமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்புக்கான யுனிசெப் நிறுவனப் பிரதிநிதி செல்வி மகா டமாஜ் சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசாவுக்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும் நிறைவேற்றுப் பணிப்பாளர் மிதிவெடி அபாயக் கல்வி தொண்டர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## ஆன்மீக நிகழ்வுகள்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தையொட்டி நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று காலை 10 மணிக்கு 'கந்தன் கவியமுதம்' என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் நித்தியதசீதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖

வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தையொட்டி நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று மாலை 7 மணிக்கு 'பெரிய புராணம் காட்டும் அன்புநெறி' என்னும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்ஷ்மி இராச நாயகம் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-35)

❖ ❖ ❖

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு ஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலய அலங்கார உற்சவத்தையொட்டி நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று 'தவமுதல்வர்' என்னும் விடயம்பற்றி ஆசிரியர் பொ.வல்லிபுரநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-29)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசைய ரங்கின் 7 ஆம் நாளான இன்று செல்வி சிவரூபி ஸ்ரீ ஜெகநாதன் (பாட்டு), ஏ.ஜெயராமன் (வயலின்), வி.ரமணா (மிரு தங்கம்), சதாவேல்மாறன் (தபேலா) ஆகி யோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.




இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச்சொற்பொழிவு கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3மணிமுதல் 6மணிவரை " மஹோற்சவம் உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம்" என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் நித்தியதசிதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து சங்கானை நிற்சாமம் ஞான வைரவர், வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-4)

## வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

மண்ணித்தலை சென் செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நவநாள் திருப்பலி நடைபெறவுள்ளது.

இதற்கான அடிப்படைதேவைகளை பூநகரி பிரதேச சபை செயலாளர் கே.துரைசிங்கம் மேற்கொண்டு வருகிறார்.

இத்திருவிழாவிற்கு பங்கு பற்றுவதற்கு யாழ்ப்பாணம், பாஷையூர் ,குருநகர், கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் செல்லவுள்ளனர்.

கொழும்புத் துறை மணியந்தோட்ட இறங்கு துறையிலிருந்து பயணிக்கும் பயணிகள் மண்ணித்தலை இறங்குதுறையை அடையும் இடத்தின் அருகிலேயே இத் தேவாலயம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (6-2)


## டெங்கு விழிப்புணர்வு தெருநாடகம்

(சுழிபுரம்)

சங்கானை சுகாதாரப் பிரிவினரின் ஏற்பாட்டில் உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் சுழிபுரம் காவேரிக் கலா மன்றத்தினரால் பல்வேறு இடங்களிலும் டெங்கு விழிப்புணர்வு தெருநாடகம் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், யா/சுழிபுரம் கிழக்கு ஆறுமுக விததியாலயம், செம்பாட்டம் தோட்டம், முதலி கோயிலடி, மாவத்தை அராலி மேற்கு, சங்கானை, பனிப்புலம் அம்மன் கோயிலடி, சங்கானை குடியேற்றத்திட்டம்,கலைநகர் சித்தன்கேணி, சுழிபுரம் சத்திய காட்டுச் சந்தை, சுழிபுரம் பெரிய புலோக் கிராமம் போன்ற இடங்களில் மேற்படி தெருநாடகம் நடத்தப்பட்டது. (6)

## தருமச்சாலை, சத்திய ஞான கோட்டத் திறப்பு விழா



(இருபாலை)

சாவகச்சேரிவேம்பிராயில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான கோட்டம் திறப்பு விழாவும் அருட்பெரும் ஜோதி வழிபாடும் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் அன்றைய தினம் அதிகாலை 4 மணிக்கு பொதுவழிபாடும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு தருமசாலைத் திறப்பு விழாவும் காலை9 மணி முதல் 11 மணிவரை மழையூர் சதாசிவம் ஐயா வழங்கும் திருவருட்பா இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து காலை11.00மணிமுதல் 1.00 மணிவரை தருமச்சாலை மகிமை என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கம், சுந்தரவல்லி அம்மா குழுவினர் வழங்கும் திருவருட்பா இசைமழை என்பனவும் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிமுதல் 4.00 மணிவரை பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்னும் விடயம் பற்றி கருத்தரங்கும் இடம் பெறவுள்ளது.மேலும் மாலை 4.00மணிக்கு அகவல் மண்டபத்தை ஜோதி முருகன் பழனி (இந்தியா) திறந்துவைக்கவுள்ளார். அத்துடன் நினைவு நூல் நிலையத்தை தயாநிதி சுவாமி சரவாணந்தா திறந்துவைக்கவுள்ளார். தொடர்ந்து மாலை 6 மணி முதல் 7.30 மணிவரை பொன்ஸ்ரீ வாமதேவனின் திருவருட்பா இசை மறையும் செல்வி ஆ.கமலித்தா மாதவன் (இந்தியா) வழங்கும் திருவருட்பா நாட்டிய நிகழ்ச்சியும் தொடர்ந்து மழையூர் சதாசிவம் ஐயா வழங்கும் சிறப்புக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் 5ஆம் திகதி வரை விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (6-4)

## சுவரொட்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ''பசுமையான சூழலைப் பேணுவோம்''என்னும் தலைப்பிலான சுவரொட்டிப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இதில் சிரேஷ்ட பிரிவில் தே.பபிராஜ் முதலாம் இடத்தையும் சி.பாலதர்சன் 3 ஆம் இடத்தையும் கனிஷ்ட பிரிவில் வ.தனுசியன் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.(6-4)

## வீட்டுத்திட்ட பூர்த்தி விழா

(திருநெல்வேலி)

தும்பளை கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைத்துக்கொடுக்கப்பட்டவீட்டுத்திட்ட பூர்த்திவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தும்பளை கிழக்கு உதயசூரியன் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் இரா வரதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (6-43)


## மரதன் ஓட்டப்போட்டி

(கொழும்புத்துறை)

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு அடுத்த மாதம் 2ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 17 முதல் 29 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் மேற்படி போட்டியில் பங்கு பற்றலாம் எனவும் பங்குபற்ற விரும்புவோர் நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் யாழ். தேசிய சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளையோர் அதிகாரிகளுடன் 021 222 2526 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் மரதன் ஓட்டப்போட்டியில் பெண்களுக்கு 21km தூரமும் ஆண்களுக்கு 40km தூரமும் போட்டிகள் நடைபெறவுள்ளது.அத்துடன் இப்போட்டியில் பங்கு பற்றும் வீரர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான போக்குவரத்து வசதி ஏற்பாடுகள் செய்யவுள்ளதாகவும் தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளையோர் அதிகாரி தெரிவித்துள்ளார். (6-51)



யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் ஆலய வருடாந்த இரதோற்சவ நிகழ்வில் சுவாமி தேரில் ஆரோகணித்து வருவதைப் படத்தில் காணலாம்.

# 'அற்றைத்திங்கள்' கூத்துருவ நாடகம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில், ஈழத்தின் பல்வேறு பிரதேசக் கூத்து மரபுகளையும் ஒன்றிணைத்து மேடையேற்றப்படும் "அற்றைத் திங்கள்" என்னும் கூத்துருவ நாடகம் இன்றும் நாளையும் மாலை 6.45 மணிக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இவ்வாண்டில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து மேடையேற்றப்படுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த ஆற்றுகைககளில் ஒன்றாக அமைகின்ற" அற்றைத்திங்கள்" கூத்துருவ நாடகம், முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றினை எடுத்துக்கூறும் படைப்பாகும். இக்கூத்துருவ நாடகத்தில் திருமறைக் கலாமன்றத்தின் மூத்த, இளைய கலைஞர்கள் பங்கேற்று நடிக்கின்றார்கள். இதற்கான எழுத்துரு, நெறியாள்கையை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யே.யோண்சன் ராஜ்குமர் மேற்கொண்டுள்ளார். (6-4)

# ஞாயிறன்று கடைகளை பூட்டி ஒத்துழைப்பு வழங்கவும்

## பரு. வர்த்தக சங்கம் கோரிக்கை

பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினால் சகல வர்த்தக உரிமையாளர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகளைப்பூட்டி விடுமுறை தினத்தை உறுதிப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

கடந்த 19ஆம்திகதி நடைபெற்ற பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6)

# வட்டக்கச்சி சந்தையை உரிய இடத்தில் இயங்க வைக்க கோரிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுர பகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் வட்டக்கச்சி சந்தை இயங்காததையிட்டு விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது,

வட்டக்கச்சியிலும் இராமநாதபுரத்திலும் சந்தை உள்ளபோதிலும் இவ்விரு சந்தைகளும் சந்தைக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இயங்காதுள்ளது. வீதியோரங்களிலும் மரநிழல்களின் கீழ் வைத்தும் வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இச்சந்தையானது கடந்த முதலாம் திகதி தொடக்கம் சந்தை வளாகத்திலேயே இயங்கவேண்டுமென பகிரங்க அறிவித்தல் மாநகரசபையால் விடுக்கப்பட்டபோதிலும் இயங்காமல் உள்ளது.

இப்பகுதி வாழ்மக்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் யாவும் இச் சந்தையில் வைத்து விற்பனை செய்ய முடியாமல் கிளிநொச்சி சந்தைக்கே கொண்டு செல்லவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இச்சந்தையை உரிய இடத்தில் இயங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்கின்றனர். (6-2)

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவருக்கு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இருவருக்கும் கொழும்பு உயர் நீதிமன்றம் பத்து ஆண்டு கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.

வடக்கிலிருந்து கொழும்புக்கு தற்கொலைக் குண்டு அங்கிகளை போக்குவரத்து செய்ததாக இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வைத்தியலிங்கம் பத்மனாதன் மற்றும் முத்துலிங்கம் வசந்தராஜா ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ரி.என்.ரி உள்ளிட்ட வெடிபொருட்களை குறித்த இருவரும் போக்குவரத்து செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (6-2)

# ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயார்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைத்திட்டம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

2005ஆம் ஆண்டு இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைத்திட்டம் வழங்கப்பட்ட காலத்தில் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும் மெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்த வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சலுகைத்திட்டம் வழங்கப்பட்ட முதல் சந்தர்ப்பத்தில் மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைத்திட்டத்தை வழங்குவது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தினால் அது ஆரம்பத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சலுகைத் திட்டத்தை வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் நாட்டின் சுயகௌரவத்தையும் இறைமையையும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொருத்தமற்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்ட காரணத்தினால் கடந்த 15ஆம் திகதியுடன் சலுகைத்திட்டத்தை இழக்க நேரிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டத்தை வழங்குவதற்கு விரும்புவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

17ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் படுத்தல், மனித உரிமைகளைப்பேணுதல், ஊடக சுதந்திரம், பயங்கரவாத மற்றும் அவசரகாலச் சட்டங்களில் திருத்தம் கொண்டு வருவதால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களின் பெயர்களை வெளியிடுதல் உள்ளிட்ட 15 நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ளது. (6-2)

# மக்கள் வங்கி கிளை திறப்பு

(அச்சுவேலி)

பருத்தித்துறை வீதியிலுள்ள புத்தூர் வடக்கு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்திற்கு அருகே மக்கள் வங்கிக் கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக அகில இலங்கை மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ கருண ஜீவ கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக அகில இலங் கைப் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான ரி.வி பத்திரனா, அகில இலங்கை சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் எச்.எஸ் தர்மசிறி, அகில இலங்கைப் பிரதிப் பொது முகாமையாளர் கே.ஆரியரத்தினா, யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்ராஸ் ,வலி பிரதேச சபை செயலாளர் ரி.நடராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-2)

யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் ( வ-து)

ஆண்டுப் பொதுக்கூட்டமும்
புதிய நிர்வாகத் தெரிவும் - 2010

காலம் : 12.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணி
இடம் : கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்.
தலைமை : திரு.இ.அரிகரன் அவர்கள் (சங்கத் தலைவர்)
குறிப்பு : மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 12.09.2010 அன்று நடாத்த இருப்பதனால் அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை கூட்டம் நடைபெறும் திகதிக்கு 14 நாட்கள் முன்னதாக சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.

செயலாளர்,
க.இலங்கநாதன்

மகளிருக்கான விடுமுறைக்கால 12 நாள் வகுப்புகள்

25 வது ஆண்டில்

கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

- கூந்தல் அலங்காரம் : 50வகையான கொண்டைகள் போடுதல்,
- முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 3 வித முடி வெட்டுதல்.
- Facials, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.), Waxing, தலை மசாஜ் செய்தல்.
- இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 23-08-2010 திங்கள் 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

எனவே இலங்கையின் கல்வியமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில், ஓர் ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கிணங்க, 1943 இல் கன்னங்கரா அவர்களின் தலைமையில் விசேட கல்வி ஆணைக் குழு அமைக்கப்பட்டது. ஆகவே 1943 ஆம் ஆண்டு நவம்பரில் வெளியிடப்பட்ட விசேட குழுவின் மாற்றங்களை கொண்டுவருதல் அவசியமெனக் கருதினர். எனவே விசேட கல்வி ஆணைக்குழு நடைமுறையில் காணப்படும் சமூகஅமைப்புக்கும், தனிமனித திறன்களுக்கும் ஏற்ப புதிய பாடசாலை அமைப்பொன்றை சிபார்சு செய்தது. அவையாவன,

அ.ஆரம்பநிலை

ஆ.ஆரம்பப் பின்னிலை

1921ம் ஆண்டு, 1946ம் ஆண்டு காலப் பகுதிகளில் எழுத்தறிவு நிலை

| மாகாணம் | ஆண்கள் | | பெண்கள் | | மக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | 1921ம் ஆண்டு | 1946ம் ஆண்டு | 1921ம் ஆண்டு | 1946ம் ஆண்டு | 1921ம் ஆண்டு | 1946ம் ஆண்டு |
| மேல் மாகாணம் | 64.7 | 76.8 | 36.8 | 58.5 | 51.8 | 68.3 |
| மத்திய மாகாணம் | 46.3 | 61.9 | 11.5 | 27.9 | 30.0 | 46.1 |
| வட மாகாணம் | 62.4 | 78.8 | 23.8 | 54.1 | 43.0 | 68.2 |
| தென் மாகாணம் | 56.9 | 65.7 | 20.5 | 38.9 | 38.7 | 52.6 |
| கிழக்கு மாகாணம் | 45.7 | 69.3 | 8.8 | 29.2 | 27.5 | 53.0 |
| வடமேல் மாகாணம் | 61.8 | 75.5 | 18.3 | 47.4 | 43.1 | 63.2 |
| வட மத்திய மாகாணம் | 55.2 | 68.4 | 4.5 | 26.4 | 33.8 | 51.6 |
| ஊவா மாகாணம் | 37:3 | 53.1 | 6.8 | 17.6 | 23.1 | 36.5 |
| சப்பிரகமுவ மாகாணம் | 50.7 | 63.7 | 10.6 | 32.4 | 32.8 | 49.3 |

அறிக்கையின் சிபார்சுகள் 1947 ஆம் ஆண்டில் கல்விக்கட்டளைச் சட்டத்தின் மூலமாகவே செயல்திட்டமாக நடைமுறைக்கு வந்தன இக்காலத்தில் பாடசாலைகளின் மீதான கட்டுப்பாடு பல்வேறு குழுக்களினால் சிறப்பாக மதக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதனை நீக்கி விட்டு தேசிய பாடசாலை முறையொன்றை நிறுவ முயற்சித்தனர். மற்றும் பாடஏற்பாட்டு மாற்றங்களினூடாக கல்வியின் பண்புசார் விருத்தியை மேம்படுத்துவதற்குப் பாடசாலை அமைப்பிலும்

இ.பல்கலைக்கழகம், தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆரம்பநிலையில் தாய்மொழியில் எல்லோருக்கும் ஒரே வகையான கல்வி வழங்கப்பட வேண்டும். ஆரம்பப் பின்னிலையில் மூன்று வகையான பாடசாலைகளைக் குறிப்பிட்டனர்.

1.இடைநிலைப் பாடசாலைகள்:- இவை ஏழு ஆண்டுப் பயிற்சி நெறியுடன் பல்கலைக்கழகம், தொழிற்றுறைக் கல்லூரிகளுக்கு இட்டுச் செல்லும்.

2.சிரேஷ்ட பாடசாலைகள்:-ஐந்து ஆண்டுப் பயிற்சி நெறியுடன் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு இட்டுச் செல்லும்.

3.பயிற்சிப் பாடசாலைகள்:- மூன்று ஆண்டுப் பயிற்சி நெறியுடன் விவசாயப் பாடசாலைகளுக்கு இட்டுச் செல்லும்.

குறிப்பாக ஆரம்பப் பின்னிலைப் பாடசாலைகள் ஒவ்வொன்றும் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு வகையாக அமைவதுடன், இப்பிரிவுகளுள் முறையே மூன்று ஆண்டும், இரண்டு ஆண்டும் கல்வி வழங்கப்படும்.இடைநிலைப் பாடசாலைகள் மேலும் 2 ஆண்டுகள் கல்வியை வழங்கும் விசேட கல்வி ஆணைக்குழுவினுடைய சிபாரிசுகளின் பிரதான நோக்கம் சகல பாடசாலைகளிலும் சமநிலையைப் பேணுவதாகும். ஆயினும் மூவகைப் பாடசாலைகளிலும் கல்வியை வழங்கவென ஒதுக்கப்பட்ட கால அளவும், பாட ஏற்பாடுகளும் சமத்துவத்தைப் பேணும் நிலையில் இருந்து விலகிச் செல்கின்றது. மூவகைப் பாடசாலைகளில் கல்வி பயில்வோரின் எதிர்காலம் பற்றிக் குறிப்பிடவில்லை என்ற வகையில் இவ்வறிக்கை மீது குற்றம் கூறப்பட்டது. மேலும் 1947 ஆம் ஆண்டில் இன்னொரு வகையான பாடசாலையமைப்பு ஆரம்ப பின்னிலையில் எடுத்துக் காட்டப்பட்டது.அவை பின்வருமாறு,

1.இடைநிலைப் பாடசாலைகள்

2.சிரேஷ்ட பாடசாலைகள்

3.பயிற்சிப் பாடசாலைகள்

4.ஏனைய வகுப்பும் வகைகளும்

ஆகவே,இலங்கை சுதந்திரமடையும் வரை முன்னைய பாடசாலை அமைப்பு முறையே தொடர்ந்து நிலவி வந்தது.

எனவே,இலங்கையின் கல்வி வளர்ச்சி முறையில் இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, கிராமியக் கல்வி,மத்திய பாடசாலைகள் அமைக்கப்பட்டமை, இலவச மதியபோசனம் வழங்கப்பட்டமை, புலமைப்பரிசில் திட்டம், தேசிய பரீட்சை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்அரசியல் அழுத்தங்கள் காரணமாக ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டன.இம்மாற்றங்கள் கல்வியில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தி சமூகத்தை மேம்படச் செய்தன என்றே கொள்ள வேண்டும்.

அத்துடன் சுதந்திரத்திற்குப் பின்னர் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு வித்திட்டன எனலாம்.ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கல்வி பெறத் தக்கவர் என்ற கொள்கையை மாற்றியமைத்து ஒவ்வொரு தனிநபரும் தனது உள்ளார்ந்த ஆற்றலை

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

வளர்த்து நாட்டின் சமூக, பொருளாதார அரசியல் வாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெறும் வகையில் அமைய வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் கன்னங்கரா குழுவினால் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன.எனவே குழுவின் சிபாரிசுகள் இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய யுகத்தினைத் தோற்றுவித்தது எனலாம்.1921 ஆம் ஆண்டில் எழுத்தறிவு நிலையையும், 1946 ஆம் ஆண்டு எழுத்தறிவு நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட விசேட குழுவின் சிபாரிசுகள் காரணமாக கல்வி கற்றோர் வீதம் மாகாணங்களில் அதிகரித்துச் சென்றமையை அவதானிக்க முடிகின்றது.

(தொடரும்)

## நீண்டநேரம் கட்டடங்களுக்குள் தங்கியிருப்போருக்கு நோய்த்தாக்கம் ஆய்வில் தகவல்

நீண்டநேரம் கட்டடங்களுக்குள் தங்கியிருப்பவர்களுக்கு ஒருவகை நோய்த்தாக்கம் ஏற்படுவதாக ஆய்வொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது.

தேசிய ஆராய்ச்சி மன்றம் மேற்கொண்ட ஆய்வில் இத்தகைய் நபர்களுக்கு 'சிக் பெய்டின் சிண்ட்ரோம்' எனும் நோய் ஏற்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகள்,வீடுகள் அலுவலகங்கள் உள்ளிட்ட கட்டடங்களில் நீண்டநேரத்தைக் கழிப்பதன் மூலம் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்காமையே இதற்குக் காரணமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்கள், காதுகள், மூக்கு ஆகியவற்றில் வலிகள், உளநலப் பாதிப்பு, தலைவலி மற்றும் சருமநோய் என்பன இதற்கான அறிகுறி எனத் தேசிய ஆராய்ச்சி மன்றம் தெரிவிக்கிறது.

கட்டடங்களிலிருந்து வெளியே வந்தவுடன் இந்த நோய் குணமடைவதும் கண்டறியப்பட்டுள்ளது.

" சிக்பெய்டின் சிண்ட்ரோம்' நோய் பொருளாதார ரீதியிலான பின்னடைவுக்கும் காரணமாக அமைவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மூடப்பட்டிருக்கும் அலுவலகங்கங்களில் உள்ளவர்களுக்கே இந்த நோய் அதிகளவில் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டடங்களை உரிய தரத்துடன் அமைப்பதன் மூலம் இத்தகைய நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியுமெனத் தேசிய ஆராய்ச்சி மன்றம் தெரிவித்துள்ளது.

(6-2)

## முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மிருக பலி வேள்வி தடுக்கப்படல் வேண்டும்

### அகில இலங்கை இந்துமாமன்றம் தெரிவிப்பு

முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலில் இம்மாதம் 25ஆம்திகதியன்று மிருகபலி வேள்வி நடக்கவிருப்பதை அறிந்து வேதனையடைவதாகவும் எங்கள் சமயநெறிக்கு முரணான இந்தச் செயலை கடுமையாகக் கண்டிக்கின்றோம் எனவும் அகில இலங்கை இந்துமாமன்றம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாமன்றம் அனுப்பியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஆலய முன்றலில் மிருக பலி கொடுப்பது இந்து ஆலயங்களுக்கு ஒவ்வாத செயலாகும் சில தவறான கருத்துக்களின் அடிப்படையில் ஆலயத்தின் முன்பாக இப்படியான பாவச் செயலைச் செய்வது ஆலய புனிதத்தையும் சமயநெறியையும் மாசுபடுத்துவதாக அமைகிறது.

குறிப்பிட்ட தினத்தன்று நடத்தப்படவிருக்கும் மிருகபலி வேள்வி நிறுத்தப்படுவதற்கு அனைவரும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கிறது என்று குறிப்பிட்டுள்ளது.


(6)



இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் மனிதவள பிரிவினால் ஒழுங்கமைக்கப்பட்ட நவீன முகாமைத்துவ கொள்ளைக்கூடான உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்.மாநகரசபை அங்கத்தவர்களுக்கான வினைத்திறமை முன்னேற்றம் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்.உள்ளூராட்சி திணைக்களத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஏ.எச்.கே.சந்திரசிறி உரையாற்றுவதையும் அருகில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுார், மொழிபெயர்ப்பாளர் நியாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# வெங்காயத்தில் பீடைகளும் அவற்றினது முகாமைத்துவமும்

11-x



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...


### கஸ்கியூட்டா எனும் ஒட்டுண்ணித் தாவரம் (Custuta)

வாருங்கள் எனதருமை உறவுகளே!

வெங்காயச் செய்கையில் பிரச்சினையாகியிருக்கும் பீடைகளைப்பற்றி இத்தொடரில் விரிவாகப் பார்த்திருக்கும் நிலையில் வெங்காயத்தில் ஏற்படும் நோய்கள் , பூச்சிப் பீடைகள் என இதுவரையிலும் ஆழமாகப் பார்த்திருக்கிறோமல்லவா.

இவ்வாறான பீடைக ளுடன் ஒட்டுண்ணித் தாவரமொன்றும் இணைந்திருக்கின்றது. பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் பருத்தித்துறை , சாவகச்சேரி வீதியில் மந்திகை வைத்தியசாலையின் பின் பகுதியில் பாதையின் இரு மருங்கிலும் வளர்ந்திருந்த வெங்காயப் பயிரினை முழு வதுமாகவே காவு கொண்டிருந்த ஒட்டுண் ணித் தாவரமான கஸ்கியூட்டாவினை தற் செயலாககாண நேர்ந்தது.

வெங்காய செய்கையாளர்களுக்கு இது ஒரு பாரிய பிரச்சினையாக ஏனைய இடங்களுக்கு பரவ முன் இவ்வொட்டுண்ணி பற்றி அனைவரும் தெரிந்திருக்க வேண்டும் எனும் முனைப்பில் இக்கட்டுரை உருவெடுத்துள்ளது.



வெங்காயப் பயிரை மூடி வளரும் கஸ்கியூட்டா

அந்த வகையில் கஸ்கியூட்டா என்னும் இந்த ஒட் டுண்ணித் தாவரம் பற்றி விபரமாக இங்கே தரப்பட்டுள்ளது.

### ஒட்டுண்ணித் தாவரங்கள்

ஒட்டுண்ணித் தாவரம் என்பது ஒரு தாவரம் இன்னொரு தாவரத்தில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தங்கி வாழ்தலைக் குறிப்பிடலாம். மனிதர்களுக்குள்ளும் இவ்வாறான பேர் வழிகள் நிறையவே உண்டு.

உண்மை நண்பர்களாக நடிக்கும் போலி மனிதர்களைப் போல தாவரங்க ளிலும் உண்டென அறியும்போது மெய்சிலிர்க்கின்றது. ஐந்தறிவிலும் இயற்கையின் விநோதப்படைப்பினை பாருங்களேன்.

பகுதியாக ஒட்டுண்ணி வாழ்க்கை வாழுந் தாவரங்களுள் இலகுவாக உதாரணங் காட்டக்கூடியது மாமரத்தில் ஒட்டுண்ணியாக வாழும் குருவிச்சை தான். யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் வளர்ந்திருக்கும் மாமரங்களில் குருவிச்சை வளராத மரமே இல்லையெனலாம். மாமரத்தினுள்ளே தனது உறிஞ்சிகளை செலுத்தி தனக்குத் தேவையான நீரையும் குறிப்பிட்ட சில நுண்ணூட்டச் சத்துக்களையும் இலகுவில் உறிஞ்சி வாழும் தன்மையைப் பார்க்கலாம். கூட இருந்து எங்களிடமேயிருந்து வசதிகள் பல பெற்று கம்பீரமாகத் திரியும் மனிதர்களை குருவிச்சைக்கு ஒப்பிடலாம்.

ஆனால் இங்கே குரு விச்சையில் ஓரளவு பெரிய இலைகளுண்டு. இதன் மூலம் மாமரத்திற்கு மேலாக தானும் வளர்ந்து ஒளித்தொகுப்பு செய்து தன்னை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும். சிறிது சிறிதாக மாமரத்தையே ஆட்கொண்டு விடும். மாமரமாக என்ன செய்யலாம்.

குருவி தனக்கு இச்சையான குருவிச்சையின் பழத்தை உண் டதுமே குருவியின் கால்களில் ஒட்டி அது பறந்து வந்து மாமரத்திலிருக்கும் போது ஒட்டியது மாமரத்தில் சேர்த்தொட்டப்பட்டு அதன் மூலம் இலகுவாகப் பரவி இறுதியில் மாமரத்தையே அழித்துவிடும்.

### கஸ்கியூட்டா- முழுமையான ஒட்டுண் ணித் தாவரம்.

தாவரங்களில் இப்படி ஒருவகை. முழுமையாகவே இன்னொரு தாவரத்தில் தங்கியிருக்கும் ஒட்டுண்ணி வாழ்க்கை இது. இன்னொருவரில் தங்கி வாழுதல் என்பது எங்களது சமூகத்தினுள்ளும் புரையோடிப் போயிருக்கின்ற சமாச்சாரமாக இருப்பினும் இங்கே முழுமையாக தங்கியிருத்தல் என்பது ஒன்றையழித்து அல்லது பாதிப்பிற்குள்ளாக்கி இன்னொன்று வாழுதல் எனப் பொருள் படுகின்றதல்லவா!

ஒன்று இன்னொன்றுடன் தங்கியிருந்து இரண்டிற்கும் நன்மை கிடைக் கும் நிகழ்வினை ஒன்றிய வாழ்வு (symbiosis) என கூறுவர். இதுவல்ல கஸ்கியூட்டாவிற்கும் வெங்காயத்திற்குமான உறவு. இங்கே கஸ்கியூட்டா வெங்காயத்தின் மேல் படர்ந்து வெங்காயத்தினுள்ளே தனது உறிஞ்சியை உட்செலுத்தி தனக்குத் தேவையான அனைத்தையுமே உறிஞ்சிப் பெற்றுக் கொள்ளும் தன்மை. இங்கேயுள்ள இணைப்பு பிணைப் பாகி ஒன்று உருப்படவும் இன்னொன்று அழியவும் காரணமாயிருக்கிறது. போதைக்கு அடிமையாத லில் இந்த இணைப்பே முன்னிற்கின்றது. போதையை அது எதுவாகினும் ஆரம்பத்தில் ஒருவருக்கு தன் பணத்தில் வாங்கிக் கொடுத்து பழக்கிவிட்டு பின்னர் அவரிலேயே ஏறி சவாரி செய்பவர் கஸ்கி யூட்டா மாதிரியான முழுமையான ஒட் டுண்ணியல்லவா.



பூத்து குலுங்கும் கஸ்கியூட்டா, தாவரத்தில் பற்றியிறுக்கி இருப்பதையும் அவதானியுங்கள்

இன்னொரு வகையில் கஸ்கியூட்டா போன்ற ஒட்டுண் ணித் தாவரங்களுக்குள்ள சிறப்புத் திறமை ஏனையவற்றுக்கு ஏன் இல்லை எனவி னவ முடிகிறதல் லவா? இது தானே இயற்கையின் சூட்சுமம். உயி ரினங்களிலே இறைவனின் படைப்பிலே ஒன்றை மாதிரி இன்னொன்று இல்லை.

கஸ்கியூட்டா எனும் ஒட்டுண் ணித் தாவரத்திற்கு வேர்கள் என்று எதுவுமே இருக் காது. அப்படி யென்றால் மண்ணின்றி மரமிருக்குமா. இருக்கலாம், கஸ்கியூட்டா மரமில்லாது விட் டாலும் ஒரு கொடி வகைத் தாவரம்.

மண்ணுக்கும் இதற்கும் விதை முளைத் தெழும்பும் போது உள்ள உறவைத் தவிர பின்னால் வேறேதுமில்லை. இந்த மண்ணிலே பிறந்து இந்த மண்ணிலே வளர்ந்து அயல்நாட்டு மண் அரவணைத்த பின் இந்த மண்ணுக்கும் தனக்கும் ஒட்டும் இல்லை உறவுமில்லை என கேட்ட இம்மண்ணின் மைந்தர்கள் போலல்லவா கஸ்கியூட்டாவினது கதையும்.

சரி வேர்களென்று எதுவுமில்லை அதனால் மண்ணுக்கும் இதற்கும் எதுவித ஒட்டும் இல்லை. உறிஞ்சும் வேர்கள் வெங்காய பயிரினுள் வாழும் தன்மையுடையதால் இவ்வளவும் எமக்குள்ளும் பாவம் , பரி தாபம் , பெருந்தன்மை என பார்த்து இடங்கொடுத் தால் அடுத்த கணமே மடங்கட்டி விடும்.

எங்களூர் மனிதர்கள் போல எங்களையும் வெங்காயம் போலாக்கிவிடும் நிலை , உங்க ளுக்கும் வந்திருக் குமல்லவா.

இங்கே வெங்காயமாக ஏதோ நினைத்து விட்டுக்கொடுத்து போனால் இது தான் தருணம் என கஸ்கியூட்டா அதன் மேல் பரவி விடுவதுடன் தன் ஆயுள் முழுக்க அதன் மேல் சவாரி செய்யவும் தலைப்பட்டுவிடும். இதற்காக தனக்கு சார்பான புறச்சூழலை என்ன செய்தும் மாற்றியமைக்க தலைப்படும் எவ்வளவு ஒற்றுமைகள் பாருங்கள்!

எங்களுக்குள்ளேயே இதுபோன்ற ஒட்டுண்ணிகளாக பலர் இருக்கிறார்கள். அதிகமாக பதவிக்கதிரையிலமர்பவர்களுக்கு இது முழுக்க முழுக்கப் பொருந்தும்.

ஒரு சில நல்ல மனிதர்களைத் தவிர இந்த நல்ல மனிதர்கள் இருப்பதாலேயே ஏதோ கொஞ்ச மழையாவது வருடத்தில் பெய் கின்றதென் பார் எங்களூர் பெரியவர்.

கஸ்கியூட்டாவுக்கு இலைகளும் இல்லை. தண்டு மாத்திரம் நீண்டு மெல்லிய கொடியாகி வளைந்து விருந்து வழங்கியைப் பற்றிப் பிடித்து மேலே வளர்ந்து கொண்டே போகும். வெங்காயம் தவிர ஏனைய இருவித்திலைப் பயிர்களில் ஒட்டுண்ணியாக வாழும் சிறப்புக் குரியது.

மிளகாய்ப் பயிரும் இதனது ஒட்டுதலிலிருந்து தப்பியதில்லை. இதை விட வரணி, சாவகச்சேரி , அந்தணன்திடல், கப்பூது பகுதிகளிலுள்ள சிறுசிறு செடிகளில் இது தாராளமாக பரவியிருப்பதனைக் காணக்கூடியதாயுள்ளது.

சாத்தாவாரி, பீற்றூட், தேசி , நீர்ப்பூ சணிதகரட் , வத்தாளை, தக்காளி ,மாதுளை , கத்தரி மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய பயிர்களையும் கஸ்கியூட்டா தனது விருந்து வழங்கிகளாக வைத்திருக்கின்றது.

இவற்றை விட வீடுகளில் அழகுக்காக வளர்க்கப்படும் தாவரங்களிலும் இவ்வொட்டுண்ணி பாதிப்பை ஏற்படுத்துவதாக அறிய முடிகிறது.

(தொடரும்)

## மாங்குளம் மத்திய வைத்தியசாலை தரமுயர்த்தப்படவுள்ளது

(பருத்தித்துறை)

மாங்குளம் மத்திய வைத்தியசாலையானது தற்போது ஆதார வைத்தியசாலையாக தர முயர்த்தப்படவுள்ளது.

மேற்குறித்த இடத்தில் புதிய நோயாளர் விடுதி கட்டடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவருகிறது.

கடந்த காலங்களில் இவ்வைத்தியசாலையானது போதிய. வசதிகள் இன்றி செயற்பட்டது. இதனால் மல்லாவி, துணுக்காய் , பாண்டியன்குளம் , ஒட்டுசுட்டான் மற்றும் வான்குளம் ஆகிய பகுதி மக்கள் சிகிச்சை பெறுவதற்கு கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

தற்போது இவ்வைத்தியசாலை தரமுயர்த்தப்படுவதையடுத்து இப்பகுதி வாழ் மக்கள் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (6-2-10)

## கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு 842 புதிய மாணவர்கள்

கிழக்கு பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் கல்வியாண்டில் 842 மாணவர்களை அனுமதிக்க பல்கலைக்கழகங்களின் மானிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இவர்களில் தாதிகள் பட்டப்படிப்பு 50 பேர், உயிரியல் 273 பேர், பௌதீகவியல் 336, விவசாயம் 238, வர்த்தகம் 130, வைத்தியம் 50, கலை 108, முகாமைத்துவம் 103 பேரும் தெரிவாகியுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தற்போது பல்கலைக்கழகத்தில் பதிவுகளை மேற்கொண்டு வருவதாகவும் இதுவரை 575 மாணவர்கள் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கலைப்பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களிலும் 458 சிங்கள மாணவர்கள் அனுமதிக்காகத் தெரிவாகியுள்ளார்கள். (6)

# ஆவணி மாத இராசி பலன்கள்



## கும்பம்

அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்3, சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்

**எல்லோருக்கும் நல்லவராக நடந்து கொள்ள வேண்டுமென்று எண்ணும் கும்ப இராசி நேயர்களே!**

பொது நலத்தில் அதிக ஆர்வம் காட்டுபவர்கள் நீங்கள். அதிகாரிகளை அனுசரித்துச் சென்று, அடுத்தவர்களுக்கும் காரியங்களை முடித்துக் கொடுப்பதில் வல்லவர்களாக விளங்குவீர்கள். குடும்பத்தில் உங்களுக்கு கிடைக்கும் மதிப்பைக் காட்டிலும், கூட இருப்பவர்களிடம் உங்களுக்கு கிடைக்கும் மதிப்பே கூடுதலாக இருக்கும். "உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள்" என்று மற்றவர்கள் சொல்லவேண்டும் என்று நினைப்பீர்கள்.

இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சனி அஷ்டமத்தில் சஞ்சரிப்பதோடு, செவ்வாயுடனும் சேர்ந்திருப்பதால் தெய்வ வழிபாடுகள் மூலமே திருப்தி காணவேண்டிய மாதமாக இம்மாதம் அமையப்போகிறது. எதையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிக்க முடியாது. எதிரிகளின் பலம் கூடும். உடல் ஆரோக்கியத்திற்கென்று ஒரு பெரும் தொகையை செலவழிக்கும் சூழ்நிலை உருவாகலாம். அண்ணன், தம்பிகளை அனுசரித்துச் சென்றால் எண்ணங்கள் நிறைவேறும்.

இம்மாதம் 22ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 5, 8க்கு அதிபதி 6ஆம் இடத்தில் சஞ்சரிப்பது நன்மைதான் என்றாலும், குழந்தைகளால் பிரச்சினைகள் உருவாகலாம். வாரிசுகளின் முன்னேற்றம் கருதி எடுத்த செயல்பாடுகளில் தடைகள் ஏற்படலாம். கூட்டாளிகளால், ஏற்படும் இலாபத்தை கைக்கு வரவழைத்துக் கொள்ள இயலாது. மாமன், மைத்துனர் வழியில் அனுசரித்துச் சென்றால்தான் ஆதாயத்தை வரவழைத்துக் கொள்ள முடியும். தனஸ்தானத்தில் குருவும் வக்ரம் பெறுவதால், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது.

இம்மாதம் 31 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 4, 9க்கு அதிபதி 9இல் சஞ்சரிப்பது யோகம் தான். பொருளாதார நிலை ஓரளவு திருப்தியாக இருக்கும். எதிர்பார்ப்புகளில் ஒன்றிரண்டாவது நிறைவேறும். பழைய நகைகளைக் கொடுத்து, புதிய நகைகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய சொத்துக்களை விற்பனை செய்தும், அதன் மூலம் வரும் ஆதாயத்தைக் கொண்டும் புதிய சொத்துக்கள் வாங்க முற்படுவீர்களள.

எதிர்வரும் செப்டெம்பர் முதல் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டமாதிபதி ஏழில் சஞ்சரிக்கும் பொழுது, திடீர் விரயங்களும் ஏற்படலாம். கூட்டாளிகளிடம் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. இக்காலத்தில் சனீஸ்வர வழிபாடுகளை முறையாகச் செய்வதன் மூலம் சந்தோஷங்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

உங்கள் இராசிக்கு 3, 10க்கு அதிபதி செவ்வாய் எதிர்வரும் செப்டம்பர் 6ஆம் திகதி முதல் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, சகோதர உறவுகள் சீராகும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். பெரிய மனிதர்களின் உதவியோடு சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். தன்னம்பிக்கையோடு செயல்படும் நேரமிது.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனி, செவ்வாய் ஆதிக்கம் வலுப்பதால், அங்காரக வழிபாடும், சனீஸ்வர வழிபாடும் முறையாகச் செய்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்ய வேண்டிய மாதமிது. அஷ்டமத்தில் சனி, செவ்வாய் கூடியிருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத்திலும் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமலிருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சுபவிரயங்கள் அதிகரிக்கும் மாதமிது. தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடு திருப்தியளிக்கும்.



## மீனம்

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்ரட்டாதி, ரேவதி

**மற்றவர்களின் குற்றம், குறைகளைப் பார்க்காமல் சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்லும் மீன இராசி நேயர்களே!**

உங்களை மதிப்பவர்களுக்கு நீங்கள் உதவி செய்வீர்கள். மற்றவர்கள் செய்ய முடியாத செயல்களை நீங்கள் செய்து காட்டுவீர்கள். அதனால் பெரிய மனிதர்களின் தொடர்பு உங்களுக்கு அதிகம் உண்டு. ஐந்து நிமிடத்தில் முடியக்கூடிய வேலையாக இருந்தாலும், அதை ஐந்து நாட்கள் சிந்தித்துக் கொண்டே இருப்பவர் நீங்கள் தான்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் குரு வக்ரம் பெற்றிருப்பதோடு, சனியும், செவ்வாயும், சுக்ரனும் உங்கள் இராசியைப் பார்க்கும் விதத்தில் மாதம் ஆரம்பிப்பதால், எந்த வழியிலும் உங்களுக்கு உதவிகளும், ஒத்துழைப்புகளும் கிடைப்பது அரிது. எனவே, கூடுதல் விழிப்புணர்ச்சியோடும், குடும்பத்தில் விட்டுக் கொடுத்துச் செல்லும் தன்மையும் இருந்தால்தான் தேடுதல்கள் வெற்றி பெறும். திறமை இருந்தும் செயல்படுத்த முடியவில்லையே என்ற கவலை மேலோங்கும். வழிபாடுகளும், பரிகாரங்களும் தான் இம் மாதம் உங்கள் வாழ்கையை வழி நடத்திச் செல்ல உதவும். ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது.

இம்மாதம் 22ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, பிள்ளைகள் வழியில் பெரும் செலவு உருவாகும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் எண்ணம் மேலோங்கும். பூர்வ - புண்ணியத்தினால் கிடைத்த சொத்துக்களை கைப்பற்றி கொள்வதில் தடுமாற்றங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் உடனிருப்பவர்களிடம் அனுசரித்துச் சென்றால் தான் வீண் பழிகள் ஏற்படாது. இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் என ஒரு மாற்றம் முடிந்து அடுத்த மாற்றம் வந்து சேரும். குரு மாற்றம் வரை கொஞ்சம் பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது.

இம்மாதம் 31ஆம் திகதி துலாம் இராசியில் சுக்ரன் வலுப்பெறுகிறார். அஷ்டமாதிபதி வலுவடையும் நேரத்தில் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புமட்டும் ஓரளவு கிட்டும் வியாரத்தில் விழிப்புணர்ச்சி தேவை. தொழில் போட்டிகள் அதிகரிக்கும். எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி சிம்மத்தில் புதனும் சஞ்சரிக்கப்போவதால், குடும்ப உறுப்பினர்களின் தொல்லை அதிகரிக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகும்.

துலாம் இராசியில் எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதி செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். உடன் பிறப் புக ள் உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்து பேசுவர். கடன் சுமை கூடும். காரியத்தடைகள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் கடவுள் வழிபாடு உங்களுக்கு கை கொடுக்கும்.

**சிவல்புரி சிங்காரம்**

பார்க்கும் சனி, செவ்வாயின் ஆதிக்கத்தால், பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க, ராசி நாதன் குருவை பலப்படுத்துவது நல்லது. வியாழன் தோறும் விரதமிருந்து தென்முகக் கடவுள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எதையும் ஒருமுறைக்கு பல முறை யோசித்துச் செய்ய வேண்டிய மாதமாகும். இராசியை சனி, செவ்வாய் பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல. பெண் வழி பிரச்சினைகள் அதிகரிக்கும். வாங்கிய சொத்துக்களை விற்கும் சூழ்நிலை ஏற்படலாம். தேங்கிய காரியங்கள் துரிதமாக நடக்க தெய்வ வழிபாடுகள் தான் உங்களுக்குத் தேவை. வீடு மாற்றம், இடமாற்றம் உருவாகலாம். விவகாரங்கள் விலக்கினால் கணவன் - மனைவிக்குள் கனிவு கூடும். (முற்றும்)

# குடாநாட்டில் கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபடுவோரை கைது செய்ய வேண்டும்

## விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து வருவதனால் மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. பெண்கள் தனியாக வெளியில் செல்ல முடியாத நிலையும் அங்கு உருவாகியுள்து. பெண்கள் தனியாக வெளியில் செல்ல முடியாத நிலையும் நகைகள் எதனையும் அணிந்து கொண்டு செல்ல முடியாத பாதுகாப்பற்ற நிலையும் இங்கு உருவாகியுள்ளது. இத்தகைய கொள்ளைச் சம்பவங்களை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வைமன் வீதியில் சென்ற பெண்ணை மறித்த கொள்ளையர்கள் அவரை வாளால் வெட்டி அச்சுறுத்தி விட்டு தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த குறித்த பெண் தெய்வாதினமாக உயிர்தப்பியுள்ளார். இதேபோல் கொக்குவில் பகுதியில் கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டாரை அச்சுறுத்தி தங்க நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். தாலிக்கொடியையும் கொள்ளையர்கள் விட்டுவைக்கவில்லை.

இத்தகைய கொள்ளைச் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். ஆயுதங்களுடன் கொள்ளையர்கள் வீடுகளுக்குள் பிரவேசித்ததால் மக்களது அச்சம் இரட்டிப்பாக மாறியுள்ளது. பெண்கள் வீதிகளில் தங்க நகைகளை அணிந்து கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது நல்லூர் கந்தசுவாமி கோவில் , சந்நிதி முருகன் கோவில், துர்க்கையம்மன் கோவில் ஆகியவற்றில் உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த உற்சவங்களுக்கு பெண்கள் அச்சமின்றி செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற போதிலும் அதனைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நல்லூர் ஆலயப் பகுதியில் பொலிஸார் பெருமளவில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற போதிலும் கொள்ளைச் சம்பவங்களை முற்றாக தடுக்க முடியவில்லை. இதனால் குடாநாட்டில் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அச்சத்தினைப் போக்கும் வகையில் அரசாங்கம் உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும். குடாநாட்டில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இதன் மூலமே கொள்ளைச் சம்பவங்களை தடுக்க முடியும்.

எனவே அரசாங்கம் உரிய நடவடிக்கையினை எடுத்து குடாநாட்டு மக்களின் அச்சத்தைப் போக்க முன்வர வேண்டும். (6-2)

# நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

அமிர்தலிங்கம் நினைவுச் செயற்பாட்டு அரங்கின் ஏற்பாட்டில் தலைவர் அ. அமிர்தலிங்கத்தின் 83 ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவுச் சொற்பொழிவு எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ***யாழ்ப்பாணத்தில் கல்விச் சவால்களும் எதிர்காலமும்*** எனும் விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும் கல்வியியல் பேராசிரியருமான மா.சின்னத்தம்பி நினைவுப்பேருரை நிகழ்த்தவுள்ளார். (6-2)

# கட்சியின் புதிய தலைவர்கள் குறித்த விபரம் அடுத்தவாரம் அறிவிக்கப்படும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கட்சியின் புதிய தலைவர்கள் குறித்த தகவல்கள் அடுத்த வாரமளவில் அறிவிக்கப்படும் என ஐக்கியதேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் தலைவர், பிரதித் தலைவர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் அடுத்த வாரமளவில் வெளியிடப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை எதிர்த்து போராடக்கூடிய வல்லமை படைத்த ஒருவரைக் கட்சித் தலைமைப்பகுதிக்கு நியமிக்கத்திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய பதவி நியமனங்கள் தொடர்பில் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு இடையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யோசனைத் திட்டங்களை செயற்குழு அங்கீகரிக்க வேண்டும் எனவும் அதன் பின்னரே தீர்மானங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கான சஜீத் பிரேமதாசவும் ரவி கருணாநாயக்கவும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# பிரபாகரனை பாதுகாக்க எடுத்த முயற்சிக்கு நெடியவன் ஒத்துழைப்பு வழங்கவில்லை

## கே.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு நெடியவன் ஒத்துழைப்பு வழங்கவில்லை என குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

நோர்வே இணையத்தளமொன்றில் இது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரன், மனைவி மதிவதனி, மகள் துவாரகா மற்றும் மகன் பாலச்சந்திரன் ஆகியோரை மீட்பதற்கு தாம் கடுமையான முயற்சி மேற்கொண்டதாக குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டத்தின் போது நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது எங்களைக் காப்பாற்றுங்கள் என பிரபாகரனின் புதல்வர் சாள்ஸ் அன்ரனி தம்மிடம் உதவி கோரியதாகவும் ஹெலிகொப்டரின் மூலம் பிரபாகரன் குடும்பத்தைக் காப்பாற்றிபின்னர், அவர்களை கப்பல் மூலம் மீட்பதற்கு தாம் திட்டமிட்டிருந்த போதிலும், அதற்கு நெடியவன் ஆதரவு வழங்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் குறித்த முயற்சி பலனளிக்கவில்லை எனவும் யுத்த நிறுத்தமொன்றை அமுல்ப்படுத்தி அதன்மூலம் பிரபாகரன் உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்களை மீட்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# நூறு வருடங்களுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் புனித தலங்களாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த முஸ்லிம் பள்ளிவாசல்களை இவ்வருடத்திற்குள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் புனிதத் தலங்களாக பிரகடனப்படுத்தவுள்ளதாக தேசிய மரபுரிமைகள் கலாசார அலுவல்கள் அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வாய்மூல விடைக்காக எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலமாக எந்த ஒரு முஸ்லிம் புனித தலங்களோ முஸ்லிம் கலாசார மத்திய நிலையங்களோ உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆனால் 100 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த மதத் தலங்களை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த கலாசார அமைச்சருக்கு அதிகாரமுள்ளது.1815 ஆம் ஆண்டுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட மதத் தலங்களை தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புனித தலமாக பிரகடனப்படுத்த முடியும். முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்துடன் கலந்துரையாடி நூறு வருடங்களுக்கு மேல் பழைமையான பள்ளிவாசல்களையும் மற்றும் மதத்தலங்களையும் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

இதுதொடர்பாக ரவூப் ஹக்கீம் எம்.பி. குறிப்பிடுகையில், இலங்கையில் நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த பல புனித தலங்கள் உள்ளன. அவற்றின் புராதன கட்டடக் கலைகள் அழிக்கப்பட்டு புதிதாகக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. எனவே, இத்தகைய பள்ளிவாசல்களை புனித தலங்களாக அறிவிக்க வேண்டும்.

ஏ.எச்.எம்.அஸ்வர் எம்.பி.தெரிவிக்கையில், முஸ்லிம்கள் முதன் முதலில் வந்திறங்கிய பேருவளையிலுள்ள புராதன மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் தேசிய புனித தலமாக கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்டது. அதனை புராதன தலமாக பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இது தொடர்பிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் கூறினார்.(6-2)

# ஏ.சி.எப்.நிறுவன ஊழியர் படுகொலையுடன் தொடர்புடையோர் இதுவரை தண்டிக்கப்படவில்லை

## பிரான்ஸ் அதிருப்தி

(கொழும்பு)

அக்ஷன் பாம் (ஏ.சீ.எப்) தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 17 ஊழியர் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு இதுவரையில் தண்டனை விதிக்கப்படவில்லை என பிரான்ஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு மூதூர் பிரதேசத்தில் தன்னார்வத் தொண்டர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் படுகொலையாளிகள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் பெர்னாட் குச்னர் தெரிவித்துள்ளார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் ஒருவரை மாறி ஒருவர் குற்றம் சுமத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

மனிதாபிமான தொண்டர்களின் பாதுகாப்பு மிகவும் முதன்மையானதென அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

மனிதாபிமான தொண்டர்களின் பாதுகாப்பு குறித்து எதிர்வரும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபைக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட உள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது. (6-2)





அளவெட்டி - நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம்
23.08.2010-03.09.2010
விசேஷ விழாக்கள்
கொடியேற்றம் 23.08.2010 திங்கட்கிழமை மு.ப 10.30மணி
கைலாசவாகனம் 30.08.2010 திங்கட்கிழமை பி.ப 07.00மணி
சப்பறம் 31.08.2010 செவ்வாய்க்கிழமை பி.ப 7.30மணி
தேர் 01.09.2010 புதன்கிழமை மு.ப 11.00மணி
உறியடி 01.09.2010 புதன்கிழமை பி.ப 7.30மணி
ஸ்ரீரங்கநாதர் பாதபூஜை 02.09.2010 வியாழக்கிழமைமு.ப 9.00மணி
தீர்த்தம் 02.09.2010 வியாழக்கிழமை மு.ப 10.00மணி
ஆஞ்சநேயர், வைரவர்பொங்கல் 03.09.2010 வெள்ளிக்கிழமை மு.ப 8.30மணி
திருக்கல்யாணம் 03.09.2010 வெள்ளிக்கிழமை பி.ப 4.00மணி

(சீ-2176)

இங்கனம்,
பொறுப்புரிமைப் பரிபாலனசபை


# நல்லூரான் திருவடிக்கு இன்று 7 ஆம் திருவிழா




படங்கள் –அரவிந்

## இன்றே எழுந்து வந்து காத்திடப்பா

எத்தனை வேண்டுதல் எத்தனை நேர்த்தி
எல்லாம் வீண்தா னோகந் தவேளே
நித்தமும் உன்னையே நினைந்து - உருகியே
நிர்க்கதி யாகவே நிற்கிறேன் குமரா
பித்தனைப் போலவே சித்தம் கலங்கியே
பேயா கவேநான் பிதற்றித் திரிகிறேன்
இத்தனை நாடகம் இன்னும் எதற்காய்
இன்றே எழுந்து வந்துகாத் திடப்பா

சிந்துபுரக் கவிராயர்

## நல்வாழ்வு தருக நல்லைக்கந்தா

நல்லை நகர் கோவில் கொண்ட நாதா வடிவேலா
பொல்லாக் குறைகள் எல்லாம் போக்கியே எங்களை
நல்வாழ்வு வாழ்வதற்கு நல்வழிகள் காட்டிடுவாய்
எந்நாளும் எம் மனத்திருந்து செம்மை வழிப்படுத்திடுக

நீர்வைமணி

## நியம முறைப்படி நடக்கும்

நேரம் பூஜை கிரமம் யாவும்
நியம முறைப்படி நடக்கும்!
ஊரும் உலகும் உயர்ந்து வாழ
ஒருங்கே அழைக்கும் நல்லூர்

வீடு மனை வாசலொடு விட்டகன்ற சுற்றமதை
தேடுகின்ற மாந்தர்கட்கும் நீயே துணை !
கேடு தரு மது, வாது மோதுகின்ற இன்னல் தீர
ஓடிவா ! ஆடிவா! நாடிவா முருகா!

கொக்குவில் கே.எஸ்.சிவஞானராஜா

## நல்லையில் உறையும் கந்தா

கோலமயில் ஏறிக்குன்றுதோ றாடி வந்து
ஞாலம் காத்தருள் நல்லையிலே உறை கந்தா
காலத்தின் கொடுமைதனைக் கண்கொண்டு பாரய்யா
சாலச்சிறந்த தென்று சான்றோர் பகர்ந்த இனம்

சீலம் இழந்தின்று சீரழியும் நிலைபாராய்
நீலநிறத்தோனின் நேசமிகு மருகோனே
ஆலம் உண்டவர்க்கு ஆசானாய் ஆனவனே
ஓலம் இடுகின்றோம் ஓடி வந்து காத்தருள்வாய்

பத்மசரஸ்


நல்லையிலே வீற்றிருக்கும் கந்தனே
நாடிவரும் பக்தர்க்கு நல்லருள் புரிவாய்!

ஸ்ரீபா பன்முக வர்த்தகம்

இல.104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



# ஈழத்தவர் வரலாறு

11

## 2.வரலாற்றுதய காலத் தமிழ் மன்னர்கள்



விஜயன் இலங்கை வரும்போது குவேனியும் அவரது சமூகத்தவரும் பருத்திநூல் நூற்பதில் ஈடுபட்டிருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

பூநகரியில் அண்மையில் நிகழ்ந்த தொல்லியலாய்வுகள் இதனை நிரூபிக்கும் சான்றுகளைத் தந்துள்ளன. எனவே, விஜயனின் ஆட்சிக்காலத்திலும், அதற்கு முன்னரும் நாகதீபம் என்றழைக்கப்பட்ட வடபிரதேசத்தில் பல குறுநில அரசுகள் இருந்திருக்க வாய்ப்புண்டு என்று துணியலாம்.

தாமிரபர்ணிப் பிரதேசமடங்கிய தென்னிலங்கை ஆள்புலத்தை விஜயன் கி.மு.483 இலிருந்து கி.மு.445 வரை ஆண்டான். அவனுக்குப்பின் பண்டுவாசுதேவா (கி.மு.444 - 414), அபயன் (கி.மு.414 - 394), பண்டுகாபயன் (கி.மு.377 - 307), முத்துசிவன் (கி.மு 307 - 247) ஆகிய மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். அதன் பின்னர் ஈழத்தின் புகழ்மிக்க மன்னனான தேவநம்பியதீசன் (கி.மு.247 - 207) அரசகட்டிலேறினான்.

### 2.3. தேவநம்பியதீசன்

ஈழத்தின் வரலாற்றுக்காலம் தேவநம்பியதீசனின் ஆட்சியோடு ஆரம்பமாகின்றது. அனுராதபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு இம்மன்னனால் ஆரம்பித்துவைக்கப்பட்ட ஒற்றையாட்சி அமைப்பு வட, கிழக்கு மாகாணங்கள் உட்பட ஈழம் முழுவதும் அனுராதபுர அரசின் இறுதிக்காலம் வரை (கி.பி.10 ம் நூற்றாண்டுவரை) நீடித்திருந்தது எனப்பாளி நூல்கள் எடுத்தியம்புகின்றன. ஆனால் பாளி நூல்களை நுணுகி ஆராயும் போது வரலாற்றுக்காலத்தின் ஆரம்பத்தில் பல சிற்றரசுகள் காணப்பட்டதா தெரிகிறது. இத்தகைய சிற்றரசுகள் பல நாடளாவிய விதத்தில் காணப்பட்டதைப் பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

தேவநம்பியதீசன் காலத்தில் இலங்கையின் வடபெரும்பகுதி உத்தரதேசம் என்றும், தென்பெரும்பகுதி தக்கன தேசம் என்றும் வழங்கலாயிற்று. நாகதீவு என்ற பெயர் யாழ்ப்பாணக்குடா நாட்டிற்குரியதாக ஆள் புலச்சுருக்கமடைந்தது. தேவநம்பியதீசன் காலத்தில் பல சிற்றரசுகள் வடக்கேயும் தெற்கேயும் நிலை பெற்றிருந்தாலும், அவை அநுராதபுர மன்னனின் ஆதிக்கத்தை ஏற்றிருந்தனவென உய்த்துணர முடிகின்றது.

தேவநம்பியதீசன் காலத்திலேயே இந்தியாவிலிருந்து பௌத்த மதத்தூதுவர்கள் இலங்கைக்கு வந்தனர். அசோகனின் தர்மத்தூதை எடுத்துவந்த மகிந்ததேரர், வெள்ளரசுக்கிளையை எடுத்துவந்த சங்கமித்ததேரி முதலானோர் உத்திரதேசமூடாகவே இலங்கைக்கு வந்தனர். சங்கமித்ததேரி, ஜம்புக்கோளப்பட்டினமூடாகவே இலங்கைக்கு வந்துள்ளாள். அனுராதபுரமன்னனை நாடி, வடஇலங்கையூடாக நிகழ்ந்த வருகைகள் தடையின்றி நிறைவேற, அப்பிரதேசமும் அனுராதபுர மன்னனின் ஆதிக்கத்திற்குள் இருந்திருக்க வேண்டுமெனக் கொள்வதில் தவறில்லை. எனவே தான் தேவநம்பியதீசன் ஜம்புகோள பட்டினத்தில் ஸமுத்த-பண்ணை ஸாலா என்ற மண்டபத்தையும் ஜம்புகோள விகாரையையும் கட்டுவிக்க முடிந்தது.

தேவநம்பியதீசன் காலத்தில் தென்னிலங்கையில் பலசிற்றரசுகள் காணப்பட்டுள்ளன. கல்யாணி (களனியா) உதிய என்பவனின் அரசாகவும், உரோகனைப்பகுதியில் (காஜரகமம்), சண்டனாகம ஆகியவிடங்கள் சத்திரிய வம்சத்தினரின் சிற்றரசுகளாகவும் விளங்கியுள்ளன. காஜரகமத்தைக் கதிர்காமமென கெய்கரும், சண்டனாகமத்தைக் கல்லோயாப்பகுதி என சிற்றம்பலமும் இனம் காண்பர். கிழக்கிலங்கையில் சேருவில, சோம ஆகிய இடங்களில் முறையே, சிவ, அபய என்போரால் ஆட்சி செய்யப்பட்ட இரு சிற்றரசுகள் இருந்துள்ளன எனப் பிராமிக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகின்றது. இச்சிற்றரசுகள் தமிழ்க்குறுநில மன்னர்களுடையனவாம்.

எவ்வாறாயின் இலங்கையின் பெருமன்னனாகத் தேவநம்பியதீசன் விளங்கியுள்ளான். ஈழத்து வரலாற்றில் பௌத்தமதத்தைக் கைக்கொண்டு தன் மக்களையும் பௌத்தத்தைத்தழுவ வைத்தமையால் புகழ்ந்துரைக்கப்படுகின்றான்.

**(கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)**

### 2.4 சேனன் , குத்திகன்

தேவநம்பிய தீசன் வலிமை மிக்க மன்னாக விளங்கியமையினால் நாட்டில் அமைதி நிலவியது. அதனால் பௌத்த மதம் நாடெங்கும் பரவ முடிந்தது. நாக தீவிலும் (யாழ்ப்பாணக் குடாநாடு) பௌத்தம் பரவியது. தமிழ் பௌத்தர்கள் உருவாகினர். யாழ்ப்பாணக்குடாநாட்டில் கந்தரோடையில் காணப்படும் பௌத்த சின்னங்களும், வல்லிபுரப் பகுதியில் கிடைத்த பௌத்த சின்னங்களும் நாக தீவில் தமிழ்ப் பௌத்தர்கள் இருந்தமையைப் பறைசாற்றுகின்றன.



தேவநம்பியதீச மன்னன்

கந்தரோடையில் கிடைத்த பிராமி எழுத்து கொண்ட பாத்திரமொன்றில் 'ததஹ பத' - தத்தவின் பாத்திரம் என்றும் , இன்னொன்றில் 'குணி' என்றும் குறிப்புள்ளது.

தேவநம்பிய தீசன் காலத்தில் தமிழ்ச்சிற்றரசுகள் திறை செலுத்தி வந்தன என ஊகிக்கலாம். இம் மன்னனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இருந்தன.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

கதிர்காம, சண்டானகமச் சத்திரிய மன்னர்கள் , தேவநம்பியதீசன் பணிப்பை ஏற்று புனித அரச மரக்கிளை நாட்டல் விழாவில் கலந்து கொண்டுள்ளனர்.

அரசமரக்கிளைகளை தத்தமது அரசிலும் நாட்டியுள்ளனர். (தொடரும்)

---

# சைவசித்தாந்த முத்தியும் சங்கர வேதாந்த முத்தியும் ஓர் ஒப்பீட்டாய்வு 5

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

" ... தன்னை எனக்குத் தருவதை
அன்றியும்
என்னையும் எனக்கே தந்த தன்னது
பேரானந்தப் பெருங்கடல் அதனுள்
ஆரா இன்பம் அளித்து..." எனவும் இருபா இருபஃதில் விளக்கி நிற்றல் காணலாம்.



" தாடலை போற் கூடிய வை தானி கழாவேற்றின்பக் கூடலை நீ யேக மெனக்கொள்" எனத் திருவருட்பயனும் ஆன்மாவும் இறைவனும் இரண்டறக் கலந்து நிற்கும் முத்தி நிலையைத் தாள் + தலை என்னும் உதாரண முகத்தால் விளக்கி நிற்றல் காணலாம். தாள்+தலை என்னும் இரு சொற்கள் தாடலை என்னும் ஒரு சொல்லாய் அத்துவிதப்பட்டு இணைந்திருப்பது போல முத்தி நிலையில் ஆன்மாவும் சிவமும் இரண்டற்ற வகையில் ஏகனாய் இருத்தலை எடுத்தாளுகின்றார். பெத்த நிலையில் மலத்துடன் ஆன்மா எவ்விதம் அத்துவிதமாய் இணைந்திருந்ததோ அதுபோல ஆன்மா முத்தி நிலையில் பரிபூரணமான மெய்ஞ்ஞானத்தோடு அத்துவிதமாய் இணைந்துள்ளதென்பது தெளிவாகின்றது. இதனையே "தாடலை" போல " காறலை" (காதல் + தலைவ) என்ற பதமும் சுட்டிநிற்பது காணலாம்.

இறைவனுடன் இரண்டற்று அத்து விதமாய் இணைதலே முத்தியெனச் சித்தாந்தம் விபரிக்கையில் இறைவனடி சேர்தலை விடுதலையாக எடுத்தாளுகின்றது. மெய்கண்ட தேவரும் ' அயரா' அன்பின் அரன் கழல் செலுமே எனச் சிவஞான போதத்தில் சுட்டுகின்றார். இதுபோலவே மணிவாசகரின் அனுபவக் கூற்றும், " மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என விளம்புவதாயிற்று.வாழ்வின் உய்விற்கும், உயர்வுக்கும் பொன்னடிவுகளை சரணடைதலே சிறந்த உபாயமாக உள்ளமையாலே அருணந்தி சிவாச்சாரியாரும் ' இறைஞானம் தந்துதாள் ஈதல்' எனும் தன்மையினைக் குறிப்பிடுதல் கவனிக்கத்தக்கதாகும்.

நாம,ரூப கடந்த சொரூபநிலையில் இணையும் ஆன்மாக்களும் ரூபநிலை கடந்ததாகவே அமையவல்லதாகும். இங்கு அடைதற்குரிய சிவமும் மலவாசமற்ற சொரூப நிலைக்குரியதென்பதே பொருத்தமானதாகும்.இங்கு" தாடலை, "காறலை என்ற பதங்கள் எடுத்தாளும் விளக்க நிலைகள் குறியீட்டு நிலைக்குரியதென்பதே ஏற்புடையதாகும். இத் தன்மையைப் புலப்படுத்தும் வகையில் திருமூலரின் பாடல் அமைவுறுகின்றமை நோக்கத்தாகும்.

" பேச்சற்ற இன்பத்துப் பேரானந்தத்திலே
மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன்றும் கைக்
கொண்டு
வாச்ச புகழ்மாளத் தாழ் தந்து மன்னுமே"
எனத் திருமந்திரத்தில் " வாச்ச புகழ்

மாளத் தாழ்தந்து மன்னுமே" எனும் அடிகள் ஆழ்ந்து நோக்குதற்குரியதாகும். அகங்காரத்திற்கு ஆதாரமாகும்.புகழ் அழிந்து போகும் வண்ணம் தனது திருப்பாதங்களைத் தந்து உயர்வடையச் செய்கின்ற கருணையை ஏற்றிப் போற்றுகின்றது. இதனையே சித்தியாரும்,

" *ஆசுபடு மலமாயை யருங் கன்ம*
*மனைத்து*
*மரனடியை யுணரும்போ தகலும்பின்*
*னணுகும்*
*நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே*
*தூங்கு*
*நினைவுடையோர் நின்றிடுவர் நிலையது*
*வேயாக*" என விழித்து நிற்றல் காணலாம்.இங்கு இறையடியணைதல் என்பது அக விகாரங்களை அடக்கி, ஒடுக்கி ஆன்மா இறையின்பத்தை நாடுதல் எனும் தன்மையைப் புலப்படுத்துகின்றது.இறைவனும் ஆன்மாவும் கூடிநிற்கும் நிலையைச் சித்தாந்தமும் இரும்பை காந்தம் அணைப்பது போலவும் தீயானது இரும்பை தன்வயமாக்கி வைத்திருப்பது போலவும் நீரோடு கலந்து உப்புப் போலவும் அத்துவித முறையில் கலந்திருக்குமென எடுத்தாள்கின்றது. இவ்வகையில் ஆன்மா இரண்டற இணைந்து சிவானுபூதிப் பேரின்பத்தை உய்த்தின் புற்றிருக்கும் என்பர்.

இறைவனடி சேர்ந்தலென்பது ஆணவ வலி ஒடுக்கத்திலேயே முத்தியெனும் பேரானந்த நிலை சாத்தியம் என்பதற்கு நுட்பமாக அழுத்தம் கொடுப்பதாகும். நாமரூபம் கடந் சொரூப சிவத்தை இரண்டறக் கலக்கின்ற முத்திநிலையில் ஆன்மாக்களின் கலையும் இறைவன் தாளும் இணைவதென்பது குறியீட்டு நிலையிலேயே உண்மையை உணர்த்தும் என்பதே பொருத்தமானதாகும். பக்குவ நிலையை அடைந்த ஆன்மாவானது முத்தி நிலையில் சரீர சம்பந்தமற்ற நிலைக்குரியதென்பதே பொருத்தமானதாகும். மேலும் முத்தியானது மேலான இலட்சியமாக இரு தரிசனங்களாலும் எடுத்தாளப்பட்ட போதிலும் முத்தியின் இயல்பு,தன்மை, பண்பு போன்ற த்ன்மைகளில் பெரிதும் ஒத்த இயல்பினைக் கொண்டுள்ளமையும் முத்தியென்பது ஒரே நிலைக்குரியதென்பதும் இங்கு தெளிவானதாகின்றது.

பேராசிரியர் நா.ஞானகுமாரன்
பீடாதிபதி ,கலைப்பீடம் ,
யாழ்.பல்கலைக்கழகம்

(முற்றும்)

# புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளை சிவில் யுத்தமாக விபரிக்கக் கூடாது

## அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசாங்கப் படையினர் முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகளை சிவில் யுத்தமாக விபரிக்கக் கூடாது என இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்குலக நாடுகள் சிவில் யுத்தமாக அடையாளப் படுத்தி வருவதாக அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிக விக்ரமசூரிய அறிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் , மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் அமெரிக்க ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வி தொடர்பில் கருத்து வெளியிட்ட போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத அமைப்பொன்றுடன் இலங்கை இராணுவத்தினர் நீண்டகாலமாக போராடி வந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மனித கேடயமாக பயன்படுத்தப்பட்ட 3இலட்சம் தமிழ் மக்களை அரசாங்கம் பாதுகாப்பாக மீட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை இராணுவத்தினருக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.எவ்வித அடிப்படையும் இன்றி சிலர் குற்றச்சாட்டுக்களை சுமத்திவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(6-2)

# எண்ணெய் விலை குறைக்கப்படமாட்டாது

## பெற்றோலியத் துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்தாலும் அதற்கேற்ப இலங்கையில் எண்ணெய் விலையைக் குறைக்க முடியாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடையும்போது, இலங்கையில் எண்ணெய் விலை குறைக்கப்படாமைக்கான காரணங்கள் குறித்து ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில்கேள்வி எழுப்பினார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டாலும் ஏனைய செலவீனங்கள் மற்றும் கட்டணங்கள் குறைவடையவில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

(6-2)

# முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(நல்லூர்)

உரும்பிராய் கிழக்கு காந்தி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி மைதானத்தில் நிலையத் தலைவர் த.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட சுகாதார இணைப்பாளரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் உப தலைவருமான வைத்திய கலாநிதி வை.தியாகராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி மஹிந்த வைத்திய திலக், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்குப் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம், ஓய்வுபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.பஞ்சலிங்கம், உரும்பிராய் கிழக்கு கிராமசேவையாளர் இ.விக்னேஸ்வரன் மற்றும் உரும்பிராய் புனித மிக்ரேல் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஆ.யூட்மிக்ஸன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(6-134)

# விசேட பயிற்சியளிக்கப்பட்ட பொலிஸார் யாழில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்

விசேட பயிற்சி அளிக்கப்பட்ட பொலிஸார் யாழ்ப்பாணத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா தெரிவித்துள்ளார்.

அவசர நிலைமைகளை சமாளிக்கக் கூடிய வகையில் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே சில பகுதிகளில் பயிற்சி அளிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாவும் தெரிவித்துள்ளார். (6-2)

# இடம்பெயர்ந்த 25ஆயிரம் குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்க நடவடிக்கை

இடம்பெயர்ந்த 25 ஆயிரம் குடும்பங்களுக்கு அவர்களின் சொந்தக் காணிகளுக்கான சட்டபூர்வ உறுதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவினால் சர்ச்சைக்குரியதாகியுள்ள காணிகளின் முறையான சொந்தக்காரர்களுக்கு அவற்றுக்கான உறுதியை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்தி உள்ளது.

முதற்கட்டமாக எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்க காணி சீர்திருத்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது. மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இவ்வாறு 50 குடும் பங்களுக்கு ஏற்கனவே உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா கூறியுள்ளார்.

அத்துடன் காணி உறுதிகளை வழங்குவதற்காக ஆணைக் குழு நடத்திய ஆய்வின் மூலம் 25 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார் .

(6-2)

# 21.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



### நிகழ்வுகள்

- 1770 -கப்டன் ஜேம்ஸ் குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூ சவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டான்.
- 1821 - ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1831 -கறுப்பின அடிமைகளுக்குத் தலைமை தாங்கி நாட்டர்னர் கிளர்ச்சியைத் தொடங்கினர்.
- 1842 - டாஸ்மானியாவின் தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப் பட்டது.
- 1863- அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப் பட்டது.
- 1911 - லியனார்டோ டாவின்சியின் ஓவியமான மோனாலிசா பாரிசின் லூவர் அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டது.
- 1920 - சேர் ஏ.கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணயசபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் ஆரம்பமானது.
- 1945 -இரண்டாம் உலகப் போர்: சாலமன் தீவுகள் தொடர் சமர் முடிவடைந்தது.
- 1959- ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50ஆவது மாநிலமாக இணைக் கப்பட்டது.
- 1963 - தெற்கு வியட்நாமின் குடியரசு இராணுவத்தினர் நாட்டின் பௌத்த தலங்களை அழித்து நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.
- 1968 - சோவியத் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகளின் படையினர் செக்கோஸ்லாவாக்கியாவைக் கைப்பற்றின.
- 1969 -அவுஸ்திரேலியனான மைக்கல் டெனிஸ் ரொஹான் என்பவன் ஜெருசலேமின் அல் அக்சா மசூதிக்கு தீ வைத்தான்.
- 1986 -கமரூனில் நியோஸ் ஆற்றில் காபனீரொட்சைட்டு வளிமம் கசிந்ததில் 1800 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1991 -லாத்வியா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1991- சோவியத் தலைவர் மிக்கைல் கொர்பச்சோவ் மீதான ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தோல்வியடைந்தது.
- 2007 -சூறாவளி டின் மெக்சிகோவை 165 மைல்/மணி வேகத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

### பிறப்புகள்

- 1906 - ப.ஜீவானந்தம், பொதுவுடைமைவாதி (இ.1963)
- 1917 - லியோனிடு ஹுர்விக்ஸ், ரஷ்யப் பொருளியல் அறிஞர்(இ.2008)
- 1936 - வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக் காரர் (இ.1999)
- 1986-உசேன்போல்ட், ஜமெய்க்காவைச் சேர்ந்த தடகள ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1901 - அடோல்ஃப் ஃபிக், தொடு வில்லையைக் கண்டுபிடித்தவர் (பி .1829)
- 1940 - லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர் (பி.1879)
- 1995 - சுப்பிரமணியன் சந்திரசேகர், இந்திய வானியல் - இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1910)
- 2006 - உஸ்தாத் பிஸ்மில்லாஹ் கான், இந்திய ஷெனாய் இசைக்கலைஞர் (பி. 1916)



1983 - பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனினோ அக்கினோ மணிலாவில் கொலை செய்யப்பட்டார்.

# மழை காலத்தினை கருத்திற் கொண்டு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை

(அச்சுவேலி)

மழைகாலத்தினை கருத்திற் கொண்டு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பகுதியில் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக எதிர்காலத் திட்டமிடல் மேற்கொள்வதற்கான பிரதேச செயலர், நிர்வாக அலுவலர்பிரதேச சுகாதார வைத்திய பணிமனை அலுவலர்,பிரதேசசபை செயலர், இளைஞர் சேவை மன்ற அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் வாராந்தம் பிரதேச செயலகத்தில் நடைபெறும் டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டத்தில் திட்ட நடவடிக்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமையகிராம அலுவலர்,சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்,பொதுச் சுகாதார பரிசோதகர்,பிரதேச சபை அலுவலர், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கிராமங்கள் தோறும் டெங்குநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவு ள்ளன.

(6-4)

# சுயதொழில் ஓய்வூதியத்திற்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களிலிருந்து 50ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ள திட்டம்

(கொழும்பு)

சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு ஓய்வூதியத்தை வழங்கும்திட்டத்திற்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து 50 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ளும் விசேட வேலைத் திட்டம் ஒன்றை சமூக பாதுகாப்பு சபை ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக சகலருக்கும் ஓய்வூதியம் எனும் திட்டத்தின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவோரை ஓய்வூதியத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் சிறுகைத்தொழில், நடுத்தரக் கைத்தொழில், உணவு உற்பத்திப் பொருள் என்பவற்றில் ஈடுபடுவோர், முச்சக்கரவண்டி சாரதிகள், வர்த்தக சமூகத்தினர் என்போரை இலக்காக வைத்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக சமூக பாதுகாப்பு சபையின் தலை வர் நிமல் அமர சிங்க தெரிவித் துள்ளார். (6)


## சேவையினைப் பாராட்டுவோம்




இலங்கை வங்கி தனிலே
28 ஆண்டுகளுக்கு மேல்
நற்சேவையாற்றி
இன்று 21.08.2010இல்
கொழும்பு
பண்டாரநாயக்க
சர்வதேச மகாநாட்டு
மண்டபத்தில்
(B.M.I.C.H இல்)
வங்கித் தலைமையகத்தில் பதக்கம் சூட்டி
கௌரவமும் விருதும் பெறும்
**கைலாசபிள்ளை விக்னேஸ்வரன் (விக்கி)**
அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

சித்திவிநாயகர் என்ரபிரஸ்
உரிமையாளரும் பணியாளர்களும்.
131,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0165

(2220)


# பூநகரிப் பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பிரதேசத்தில் சுற்றுலா அபிவி ருத்தி தொடர்பான கலந்துரையாடல் அண் மையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் உள்ளூரட்சி திணைக்கள கேட்போர் கூடத் தில் நடைபெற்றது.

இதில் பூநகரிப் பிரதேசத்தின் பிரதான இடங்களை தென்பகுதி மக்கள் பார்வை யிட்டுச் செல்லும் வகையில் சுற்றுலாத்து றையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுடன் ஆளுநர் கலந்துரையாடினர்.

இதில் யாழ்ப்பாண உற்பத்திகளை விற்பனை செய்யும் முகமாக பூநகரி துறை முகத்தில் கோப் சிற்றி கடைகள் நிறுவப்பட வேண்டும் எனவும் தென்பகுதி மக்கள் பூநகரியைப் பார்வையிடுவதற்கு இலகுவாக பரந்தனிலும் ஆனையிறவலும் பூநரிக்குச் செல்லும் பாதையை வெளிப்படுத்தும் பெயர்ப்பலகை நிறுவப்பட வேண்டும் எனவும் தென் பகுதியிலிருந்து வரும் சுற்று லாப் பிரயாணிகள் யாழ்ப்பாண நகரில் இருந்து பூநரிகரிக்கு செல்வதற்கான பஸ் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் இந்கிழ்வில் யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம், யாழ். உள்ளூராட்சி உதவியாணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் ரி. இராசாநாயகம், பூநகரி பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(6-4)


## தொழிற்பயிற்சிகள்




Mobile Phone Repairing
Duration-3 month




T.V & DVD Player Repairing
Duration-10 month




Air-conditioning & wiring
Duration-6 month

சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்

ஆரம்பம்:-24.08.2010 28.08.2010

விபரங்களுக்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**

No,45, clock Tower Road,
Jaffna.
T.P 0718561654

Branch- NEW ASIAN CENTER
56/15. Stanley Road,
Jaffna.
T.P0779254078

ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம்
உள்ளே இருப்பது ஈரும் பேனுமாம்

~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தோல் இருக்க சுளை விழுங்கும் பண்பாடு தொடர்கின்றது

புற்றுநோய் மிகவும் ஆபத்தானது. ஆரம்பத்தில் இனங்கண்டால் அதனைச் சுகப்படுத்தலாம் என்ற நல்லசெய்தி உண்டாயினும், புற்றுநோயை இனங்காண்பதில்தான் சிக்கலே உள்ளது. ஆள் அப்படியே இருக்க புற்று அவரை அழிப்பதற்காக உடலுள் வளர்ச்சியடையும்.

இந்த நிலையில் தான் பலர் மரணிக்க நேரிடுகிறது. இது புற்றுநோய் சார்ந்த பிரச்சினை.

புற்றுநோய்க்கு ஒப்பான இன்னுமொரு வடிவம் உண்டு. அதுதான் தோல் இருக்க சுளை விழுங்கும் வடிவம். இஃது என்ன என்று நீங்கள் கேட்கலாம். இதுபற்றி விளங்கப்படுத்துவதை விட,

இலங்கை தமிழர் விடயத்தில் அரசின் நடவடிக்கை தான் இது என்று கூறுவது விளக்கம் பெறுவதற்குச் சுலபமாக இருக்கும்.

அதாவது, தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பட்டதுன்ப துயரம் ஏராளம். அந்த துயரம் இன்னமும் முடிந்தபாடாக இல்லை.

யுத்தகாலத்தின்போது எறிகணை, விமானக் குண்டுவீச்சு, பல்குழல் தாக்குதல் என அழிவு நடவடிக்கை தொடர்ந்தது. இதனால் அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகினர். இவை வெளிப்படையாக நடந்தன.

இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. ஏ-9 பாதை திறக்கப்பட்டதோடு பிரச்சினை தீர்ந்துவிட்டதென மக்கள் நினைக்கலாம். கூடவே மீள் குடியமர்வு பற்றிய தகவல்களும் வெளிவருவதால் எல்லாம் சரியாகிவிட்டது என்ற நினைப்பும் இருக்கும்.

இந்த நினைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு கையடக்கத் தொலைபேசி, பிளாஸ்ரிக் பொருட்கள், அப்பிள், அன்னாசி, றம்புட்டான், வீட்டு உபகரணங்கள், வீடுதேடிவரும் தளபாடங்கள், தமிழகத்தின் சாறிவகைகள்...

அடேங்கப்பா இதுவல்லவோ அமைதிநிலை, சுமுகநிலை என்ற நினைப்பில் நாம் இருக்கும் வேளையில்,

எங்கள் வன்னி மண் அரச உடைமை என்ற பெயரில் தென்பகுதி வாசிகளின் குடியேற்ற பூமியாக மாற்றப்படுகிறது.

இதற்குமேலாக உயர் பதவிகள், நீதிமன்றங்கள், செயலகங்கள் என எங்கும் சிங்களவர்களின் நியமனங்கள். இவற்றையும் தாண்டி இராணுவக் குடியிருப்புத் திட்டங்கள், படைமுகாம்களுக்கான இட ஒதுக்கீடுகள்...

நிலைமை இப்படியே நகர தமிழினத்தின் இறைமை, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம், பல்கலைக்கழக அனுமதி, தனித்துவம் என அத்தனையும் பறிபோகும்.

இந்தப் பரிதாப நிலை வெளியில் உடனடியாக தெரியப் போவதில்லை. இதைத்தான் தோல் இருக்க சுளை விழுங்குதல் என்பர். இலங்கையில் இந்தப் பண்பாடு தொடரவே செய்கிறது. என்னசெய்வது! தடுப்பது யார்?

மாவிட்டபுரத்து சுண்ணக்கல் அகழ்வில் தொடங்கி கொக்கிளாய் காடழிப்பு வரை நடந்தேறும் சுளை விழுங்கலை அறியாத அப்பாவிகளாக தமிழ் மக்கள் இருப்பது தனக்குள் இருக்கும் புற்றுநோயை அறியாதவரின் நிலையாகவே அமையும்.

# டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தின் ஐக்கிய சிறப்பு நிகழ்ச்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

டெங்குநோய் கட்டுப்பாட்டுக்கான ஜனாதிபதி செயலணியின் வேண்டுகோளிற் கிணங்க வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் நேரடி வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அதிரடியாக டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ் நடவடிக்கை காரணமாக வடமாகாணத்தில் டெங்கு அதிகரிப்பு வீதத்தை குறுகிய காலத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமைக்கு உள்ளூராட்சி மன்றங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தமையே காரணமாகும்.

தற்போது டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் தொடர்பான மேற்படி தினத்தை முன்னிட்டு உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சரின் நேரடி வேண்டுகோளின் பெயரில் வடமாகாண ஆளுநரின் சிறப்பு வழிகாட்டலில் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள், சிரமதான செயற்பாடுகள் மற்றும் சுகாதாரக்காப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடமாகாண ஆளுநர், பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் குறித்த விசேட செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ்மாவட்டத்தில் மானிப்பாயிலும், மன்னார் மாவட்டத்தில் பெரியகமத்திலும் மற்றும் வவுனியா மாவட்டத்திலும் வவுனியா நகரப்பகுதியிலும் ஆரம்பித்து செயற்படுத்தவுள்ளனர். இதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் வடமாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி டெங்கு ஒழிப்புச் செயற்திட்டங்களில் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து செயற்படுத்த சகல அரச நிறுவனங்கள் சமூக அமைப்புக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர். (ச)

# இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு இலங்கை அகதிகள் விருப்பம் தெரிவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளில் பெரும்பாலானவர்கள் இந்தியக் குடியுரிமை பெற விரும்புவதாக தமிழக அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் போர் முடிபுக்கு வந்து ஓராண்டுக்கும் மேலாகிவிட்டாலும் கடந்த பல வருடங்களாக தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் 90ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் தொடர்ந்தும் இந்தியாவிலேயே தங்கியிருக்க விரும்புவதாக தமிழக அரசின் மறுவாழ்வுத்துறையின் இயக்குநர் எம். கலைவாணன் தெரிவித்தார்.

இவர்களில் பலர் இந்தியர்களை திருமணம் செய்து கொண்டிருப்பதும் படிப்பைத் தமிழகத்தில் தொடர்ந்து கொண்டிருப்பதும் இதற்கு முக்கிய காரணங்கள் எனவும் அவர் கூறினார்.

இதற்கு அப்பாற்பட்டு இலங்கையில் இன்னும் முழுமையான இயல்பு நிலை திரும்பவில்லை என்கிற கருத்தும் அவர்களிடையே நிலவுகின்றது.

தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் ஒரு இலட்சம் இலங்கை தமிழ் அகதிகளில் பத்து சதவீதமானவர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு திரும்புவதற்கு விரும்புகிறார்கள்.

அதற்கான முன்னெடுப்புகளை இவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்புடன் மேற்கொண்டு வருகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையிலேயே இன்னமும் பலர் தங்களது சொந்தப் பகுதிக்கு செல்ல முடியாத நிலை இருக்கும்போது எம்மால் எப்படி அச்சமில்லாமல் திரும்பிச் செல்ல முடியும் என சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் தரமங்கலம் பகுதியில் இருக்கும் அகதி முகாம்களில் உள்ள பலர் கேள்வி எழுப்பினர். (ச-5)

# கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயார்

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

யுத்த சூழ்நிலையில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை ஆற்றிய பங்கும் பணிகளும் பாராட்டுக்குரியவை என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 88 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவில் பிரதம விருந்தினராக நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நிலவிய யுத்த சூழ்நிலையில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மக்களுக்கு சிறப்பான பணிகளைச் செய்திருந்தமை பாராட்டுக்குரியது. யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையானது ஒரு காலகட்டத்தில் ஏனைய கூட்டுறவுச் சபைகளையும் விட முதன்மையாகத் திகழ்ந்ததை யாரும் மறுப்பதற்கில்லை.

எனவே எதிர்காலத்திற்கு ஏற்றவகையில் கூட்டுறவுச் சபையின் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும்கருத்தில் கொண்டு புதிய சட்டங்களை உருவாக்கவேண்டும் என்பதுடன் முன்னரைப்போல் அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராகவும் இருக்கிறேன்.

எனது அமைச்சினுடாக குடாநாட்டில் பல்வேறு கைத்தொழிற் பேட்டைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை கூட்டுறவுச்சபையும் கட்டியெழுப்பி அதன்மூலம் எதிர்காலத்தில் மக்கள் நலன்சார் விடயங்களில் மேலும் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

அத்துடன் வீரசிங்கம் மண்டபம் சகல வசதிகளுடனும் நவீனமயப்படுத்தவுள்ளதாகவும், அதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு நல்கவேண்டுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இராஜாராம் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிறப்புரையை அடுத்து சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், மாவட்ட கூட்டுறவுச் சபை அங்கத்தவர்கள், ஊழியர்கள் மத்தியில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபேற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

பரிசில்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் பந்து ரணவக்க உள்ளிட்டோரும் வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் மாவட்ட கூட்டுறவுச் சபைக்குட்பட்ட அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ச-5)

## குடத்தனை கற்றல் வள நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

வடமராட்சி கிழக்கு குடத்தனை இடைத்தங்கல் முகாமில் அமைக்கப்பட்டுள்ள கற்றல் வள நிலையத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரண்டு இலட்சத்து பதினொராயிரம் ரூபாயை வழங்கியுள்ளார்.

அமைச்சரின் யாழ்.செயலகத்தில் வைத்து கற்றல் வள நிலைய நிர்வாகியான உதயபாஸ்கரனிடம் காசோலையை அமைச்சர் கையளித்தார்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக இந்தப் பணத்தைக் கொண்டு கணனித் தொகுதியொன்றை கொள்வனவு செய்வதுடன், ஆசிரியர்களுக்கான சம்பளம் மற்றும் மாணவர்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு பசும்பால் கொள்வனவிற்குமென இப் பணம் வழங்கப்பட்டுள்ளது. (ச)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



சொல்லால் விளக்க முடியரத ,விபரிக்க முடியாத அன்பின் சாரமாக இருப்பவன் இறைவன்.இதை உணரமுடியுமே தவிர விளக்க முடியாது.

எப்போதும் கொடுப்பவனின் நிலையில் இரு. கைம்மாறு கருதாமல் எதையும் கொடு.அன்பாக நடந்து கொள்.உதவி செய்.தொண்டு செய்.

சிறிது என்று கருதாமல் உன்னிடம் இருப்பது எதையும் கொடு.ஆனால் பண்டமாற்று நோக்குடன் செய்யாதே. நிபந்தனைகளை விதிக்காதே.பிறரும் உன் மீது நிபந்தனைகளை சுமத்தமாட்டார்கள்.இறைவன் நமக்கு கொடுப்பது போலவே நமது சொந்த முயற்சியால் கிட்டுவதைப் பிறருக்கு நாம் வழங்குதல் வேண்டும்.

# இந்தியாவின் உதவியை பாகிஸ்தான் ஏற்றது


(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் வரலாறு காணாத வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

இதனையடுத்து ஐ.நா.சபை பொது செயலாளர் உலக நாடுகள் அனைத்தும் பாகிஸ்தானிற்கு உதவி செய்யும் படி வேண்டுகோள் விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்தியா வெள்ள நிவாரண நிதியாக மருத்துவம் மற்றும் உணவுப்பொருள் போன்ற பொருட்களை சுமார் 5 மில்லியன் டொலர் அளவிற்கு உதவிகளை அளித்தது.

இந்த உதவிகளை ஏற்க பாக் அரசு தயக்கம் காட்டியது. இந்நிலையில் இந்தியாவின் உதவிகளை ஏற்றுக் கொள்வதாக அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் குரேஷி தெரிவித்தார். (6-2)



பாகிஸ்தான் முல்தானின் முஜாபர்கரில் உள்ள லால் மின் உற்பத்தி நிலையம், அங்கு ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல பகுதிகளில் மின்சார தட்டுப்பாடு நிலவுகிறது.

# ஆப்கான் போர்குறித்த இரகசிய ஆவணங்கள்; பேச்சுவார்த்தை நடத்த பெண்டகன் முன்வந்தது

## விக்கிலீக்ஸ் தலைவர் தகவல்

ஆப்கானிஸ்தான் போர் குறித்த இரகசிய ஆவணங்கள் தொடர்பாக அமெரிக்க பாதுகாப்புத் துறை தலைமையகமான பெண்டகன் அதிகாரிகள் தன்னிடம் பேச்சு நடத்த முன் வந்ததாக வீக்கிலீக்ஸ் தலைவர் ஜுலியன் அஸ்சங் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் போர் தொடர்பாக அமெரிக்க உளவுத் துறை இரகசியமாக திரட்டிய ஆவணங்களை இணையத்தளத்தின் மூலம் அம்பலப்படுத்தியது வீக்கிலீக்ஸ். இதன் மூலம் ஆப்கானிஸ்தானில் பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட தலிபான்களுக்கு பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ உதவியது தெரியவந்தது.

இந்நிலையில் வீக்கிலீக்ஸ் தலைவர் ஜுலியன் நேற்று முன்தினம் இது தொடர்பாக கூறுகையில் ,

அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை தலைமையகமான பெண்டகனில் இருந்து சில அதிகாரிகள் எங்களுடைய வழக்கறிஞர்களைத் தொடர்பு கொண்டனர். நாங்கள் வைத்துள்ள இரகசிய ஆவணங்கள் குறித்து பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் என்றார்.

ஆனால் விக்கிலீக்ஸுடன் பேச நாங்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை என்று பெண்டகன் கூறியுள்ளது.

இது தொடர்பாக பெண்டகன் செய்தித் தொடர்பாளர் பிரெயன் வொய்ட்மேன் தெரிவிக்கையில்,

விக்கிலீக்ஸின் வழக்கறிஞர்கள் என்று கூறியவர்களுடன் பெண்டகன் அதிகாரிகள் தொலைபேசியில் தொடர்பு கொண்டது உண்மைதான். ஆனால் அதற்கென்று எந்த விஷேட காரணமும் இல்லை என்று கூறியுள்ளார்.

எனினும் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்ட போர் தொடர்பான பல்வேறு இரகசிய ஆவணங்கள் விக்கிலீக்ஸ் போர் தொடர்பான பல்வேறு இரகசிய ஆவணங்கள் விக்கிலீக்ஸ் நிறுவனத்திடம் உள்ளது. அவற்றை வெளியிடும் முன் கைப்பற்றிவிட வேண்டுமென்று அமெரிக்கா பல்வேறு வழிகளில் முயற்சித்து வருகிறது என்றும் கூறப்படுகிறது. (6-2)

# மைக்கல் ஜக்சனின் பெற்றோர் விவாகரத்து



(நியூயோர்க்)

மறைந்த பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கல் ஜக்சனின் தந்தை ஜோ, தாயார் காத்ரீன் வயது (80). இவர்களுக்கு கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

மைக்கல் ஜக்சன் தவிர இவர்களுக்கு மேலும் மகன்களும் மகளும் உள்ளனர். இந்த நிலையில் இவர்கள் இருவரும் தங்கள் திருமண உறவை முறித்துக் கொண்டு விவாகரத்து பெற உள்ளனர்.

இதற்கான மனுவை மைக்கல் ஜக்சனின் தாயார் காத்ரீன் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதில் தனது கணவர் ஜோவின் நடவடிக்கைகள் கெட்ட செயல்களாக உள் ளன. எனவே அவருடன் வாழ்ந்த வாழ்க்கை போதும் என்று கூறியுள்ளார். (6-2)

# ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவத்தின் கடைசி தாக்குதல் படைப்பிரிவு வெளியேறியது

(பாக்தாத்)

ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவத்தின் கடைசி தாக்குதல் படைப்பிரிவும் நேற்று முன்தினம் வெளியேறியது. ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி அகற்றப்பட்டபின் அமெரிக்க படைகள் அங்கு குவிக்கப்பட்டன. அமெரிக்க இராணுவம் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டும் என பல்வேறு தரப்பிலும் இருந்து நெருக்கடி எழுந்தது.

இந்நிலையில் அமெரிக்க அதிபராக ஒபாமா பதவியேற்றபின் ஈராக்கில் உள்ள அமெரிக்க படைகள் அனைத்தும் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் முழுமையாக வாபஸ் பெறப்படும் என அறிவித்தார். இதன் படி ஈராக்கிலிருந்த அமெரிக்கப் படைகள் படிப்படியாக வெளியேறின. இந்நிலையில் அமெரிக்க இராணுவத்தின் நான்காவது ஸ்ட்ரைக்கர் பிரிகேட் இரண்டாவது இன்பன்ட்ரி பிரிவு ஆகிய கடைசி தாக்குதல் படைப் பிரிவுகள் நேற்று முன்தினம் காலையில் குவைத் வழியாக வெளியேறினர்.

அப்போது அவர்கள் தாங்கள் தற்போது நிம்மதி அடைந்துள்ளதாக தெரிவித்தனர். அமெரிக்க இராணுவத்தின் தாக்குதல் படைப் பிரிவினர் வெளியேறினாலும் வேறு சில பிரிவுகளைச் சேர்ந்த 50 ஆயிரம் வீரர்கள் அங்கு தொடர்ந்து தங்கியுள்ளனர். ஈராக் இராணுவத்துக்கு ஆலோசனை கூறுவதற்காகவும் அமெரிக்காவின் நலன் கருதியும் இந்த படைப் பிரிவினர் அடுத்தாண்டு இறுதிவரை அங்கு இருப்பர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வசம் ஆயுதங்கள் இருந்தாலும் சுய பாதுகாப்புக்காக மட்டுமே அவற்றை அவர்கள் பயன்படுத்துவர் என்று அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க இராணுவம் ஈராக்கில் முகாமிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

# பராக் ஒபாமா கிறிஸ்தவர்; வெள்ளைமாளிகை தகவல்

(வோஷங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கிறிஸ்தவர் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் ஒபாமா முஸ்லிம் என அந்நாட்டு மக்களில் 18 சதவீதம் பேர் நம்பியிருந்ததாக அங்கு நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் தெரியவந்தது.

இதனையடுத்து வெள்ளை மாளிகை செய்திப் பிரிவு செயலர் பில் பர்டன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், அதிபர் ஒபாமா கிறிஸ்தவர். அவர் தினமும் பிரார்த்தனை செய்கிறார். கிறிஸ்தவ பாஸ்டர்களிடம் இருந்து ஆலோசனைகளையும் கேட்டு வருகிறார் என தெரிவித்துள்ளார். மேலும் அவர் எந்த விதமான மதக் கொள்கையை பின்பற்றுகிறார் என்பது பொதுமக்கள் விவாதத்துக்கும் கருத்து கணிப்புக்கும் எடுத்துக் கொள்ளக் கூடிய விடயம் இல்லை என்றும் கண்டிப்புடன் தெரிவித்துள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்த பியூ ரிசேர்ச் சென்டர் போல் என்ற நிறுவனம் இந்த வாக்கெடுப்பை நடத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் சிக்கிய பிரிட்டிஷ் அமைச்சர்கள்

(லண்டன்)

பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பிரிட்டிஷ் அமைச்சர்கள் மற்றும் அந்நாட்டு உயரதிகாரிகள் சிக்கிக் கொண்டனர். அவர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் ஹெலிகொப்டரில் சென்று மீட்டு வந்தனர்.

பாகிஸ்தானில் வெள்ளம் பாதித்த பகுதியைப் பார்வையிடுவதற்காக பிரிட்டிஷ் அமைச்சர்கள் ஆண்ட்ரூ மிட்ஷெல் , பரோனஸ் வார்ஜி மற்றும் உயரதிகாரிகள் கார்களில் கடந்த புதன்கிழமை சென்று கொண்டிருந்தனர். அப்போது நவ்சேரா பகுதியில் தலிபான்களை விரட்டுவதாகக் கூறி இரண்டு அப்பாவிகளை இராணுவத்தினர் கொன்று விட்டனர் என்று குற்றம் சாட்டி அப்பகுதி மக்களில் ஏராளமானோர் வீதியில் வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கார்களைச் சுற்றி வளைத்து கற்களை வீசியும் பெற்றோல் குண்டுகளை காரின் அருகே வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து வேகமாக செயல்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் சென்ற காரை அவசரமாக வந்த வழியிலேயே திருப்பிச் செலுத்தினர். பொதுமக்கள் கற்களை வீசித் தாக்கியதில் 3 கார்கள் சேதமடைந்தன.

அதிர்ஷ்டவசமாக அமைச்சர்களுக்கோ அதிகாரிகளுக்கோ காயம் ஏதும் ஏற்படவில்லை. அப்பகுதியில் உள்ள பீரங்கிப் படைத் தளத்தில் அமைச்சர்கள் ஒருமணி நேரம் காத்திருந்தனர். பின்னர் பாகிஸ்தான் இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் அவர்கள் அனைவரும் பத்திரமாக இஸ்லாமாபாத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (6-2)



அமெரிக்க இராணுவத்தின் நான்காவது ஸ்ட்ரைக்கர் பிரிகேட் இரண்டாவது இன்பன்ட்ரி டிவிஷன் ஆகிய கடைசி தாக்குதல் படைப்பிரிவினர் ஈராக்கிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறினர். படைப்பிரிவினரின் டாங்கிகள் குவைத் எல்லையை கடந்து வரிசையாக வருகின்றன.

# மழை நேற்றும் தாண்டவம்

# இலங்கை அணி நெருக்கடியில்



(தம்புள்ளை)

முத்தரப்பு ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கை–நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி மழை காரணமாக முடிவின்றி கைவிடப்பட்டது.

இந்தியா, இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் தம்புள்ளையில் நடைபெற்று வருகிறது.

இத் தொடரில் ஒவ்வொரு அணியும் லீக் சுற்றில் இரு முறை மற்றைய அணியுடன் மோதும்.

இதில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் ஒரு முறை மோதியதில் மூன்று அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றது.

இந் நிலையில் தொடரின் நான்காவது போட்டி நேற்று முன்தினம் நடைபெறவிருந்த போது மழைகாரணமாக ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்ட ஆட்டம் மேலதிக நாளான நேற்று மீண்டும் நடத்தப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க டில்சான் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் உபுல் தரங்க 23 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 12 ஓட்டங்களை எடுத்து தௌப்பியின் பந்துவீச்சில் மில்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 9.4 ஓவர்களில் 56 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்கார சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.

எனினும் மறுமுனையில் திலகரட்ண டில்சான் 52 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தனா, சங்கக்காரவுக்கு சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இலங்கை அணி 23 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் குமார் சங்கக்கார 59 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 40 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மஹேல ஜெயவர்த்தனாவுடன் இணைந்த சமரசில்வா சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இதில் மஹேல ஜெயவர்த்தனா 69 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்தி செய்ய இலங்கை அணி 43.2 ஓவர்களில் 200 ஓட்டங்களை தொட்டது.


இந் நிலையில் இலங்கை அணி 43.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 203 ஓட்டங்களை எடுத்த போது மழை குறுக்கீடு செய்ய ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும் மழை தொடர்ந்து நீடிக்க நேற்றைய போட்டி முடிவின்றி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் இரு அணிகளுக்கும் தலா இரண்டு புள்ளிகள் வழங்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் மஹேல ஜெயவர்த்தனா 72 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 59 ஓட்டங்களையும் சமர டி சில்வா 57 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 41 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரரிஸ் 2 விக்கெட்டுக்களையும் தௌப்பி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



**இலங்கை அணி நெருக்கடியில்**

இப் போட்டி முடிவின்றி கைவிடப்பட்டமையால் இரு அணிகளுக்கும் தலா இரண்டு புள்ளிகள் வழங்கப்பட்டது.

இதன் மூலம் இரு அணிகளும் தொடரில் 3 போட்டிகளில் விளையாடியுள்ள நிலையில் நியூசிலாந்து அணி மொத்தம் 7 புள்ளிகளையும் இலங்கை அணி மொத்தம் ஆறு புள்ளிகளையும் பெற்றுள்ளன.

இத்தொடரில் விளையாடும் மற்றைய அணியான இந்தியா இரண்டு போட்டிகளில் விளையாடி 5 புள்ளிகளை பெற்றுள்ளது.

இதனால் இலங்கை அணி தனது கடைசி லீக் போட்டியில் நாளை இந்திய அணியை சந்திக்கவுள்ளது.

இப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றால் மாத்திரமே இறுதிப் போட்டிக்குள் நுழையும் வாய்ப்பை பெறமுடியும். இப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றால் நியூசிலாந்து அணியுடன் தகுதி பெறும்.

அத்துடன் நாளைய போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தாலும் எதிர்வரும் 25 ஆம் திகதி நியூசிலாந்து அணியுடனான போட்டியில் வெற்றியடைந்தால் இறுதிப் போட்டி வாய்ப்பை பெறும்.

## ஐ.சி.சி. விருது பட்டியலில் சுவான்

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் கடுமையான எதிர்ப்பையடுத்து ஐ.சி.சி. விருதுகளுக்கான வீரர்கள் பரிந்துரைப்பட்டியலில் சுவான் இடம்பெற்றார்.

கிரிக்கெட் ஒஸ்கார் எனப்படும் ஐ.சி.சி. விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழாக்கள் வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி பெங்களூரில் நடக்கிறது.

இதில் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான சிறந்த வீரர்கள் என ஏழு விதமான விருதுகள் வழங்கப்படவுள்ளன. இதில் ஆண்டின் சிறந்த வீரர்களுக்கான பரிந்துரை பட்டியலில் இந்தியாவின் சச்சின், தோனி, சேவாக் இலங்கையின் மஹேல ஜெயவர்த்தனா, அவுஸ்திரேலியாவின் பொலிங்கர், வோட்ஷன், தென்னாபிரிக்காவின் கலீஸ், அம்லா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். ஆனால் சுழற்பந்து வீச்சில் அசத்திய இங்கிலாந்து வீரர் சுவான் பெயர் பரிந்துரைப்பட்டியலில் இடம் பெறவில்லை.


**இங்கிலாந்து எதிர்ப்பு**

இதற்கு இங்கிலாந்துத் தரப்பில் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. விருதுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்களில் (ஆக்.24, 2009 முதல் ஆக்.10, 2010 வரை) இங்கிலாந்து சுழல்பந்து வீச்சாளர் சுவான் அசத்தியுள்ளார். 10 டெஸ்ட் போட்டிகளில் 49 விக்கெட், 23 ஒருநாள் போட்டிகளில் 28 விக்கெட்டுக்கள் மற்றும் 11 இருபது–20 போட்டிகளில் 16 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார்.

இவரது அசத்தலான செயற்பாடு கைகொடுக்க இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த இருபது–20 உலகக்கோப்பைத் தொடரில் இங்கிலாந்து கோப்பையை வென்று சாதித்தது.

இதனால் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருது பரிந்துரைப்பட்டியலில் சுவான் இடம்பெறவேண்டும் என இங்கிலாந்து கோரிக்கை விடுத்தது. இதனையடுத்து இவரது பெயரை ஐ.சி.சி நேற்று முன்தினம் இணைத்தது.

## அமீர், அஜ்மல் அச்சுறுத்தல்; இங்கிலாந்து அணி அடங்கியது



(லண்டன்)

அமீர், அஜ்மல் ஜோடியின் துல்லியமான பந்துவீச்சில் இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் மூன்றாவது போட்டி கடந்த 18ஆம் திகதி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 233 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 308 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குக் 110 ஓட்டங்களையும் திரோட் 36, பீற்றர்சன் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

களத்தில் பிரோட் 06 ஓட்டங்களுடனும் ப்பின் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் அமீர், அஜ்மல் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் றியாஸ் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியின் நான்காம் நாளான இன்று இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் கைவசமுள்ள நிலையில் 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

# 15 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த கிராம அலுவலர்கள் தரம் I ற்குப் பதவியுயர்வு

(கொழும்பு)

கிராம சேவை அலுவலர் தரம் II இல் 15 வருட சேவை காலத்தைப் பூர்த்தி செய்துள்ள கிராம அலுவலர்களைத் தரம் I ற்குச் சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் பதவியுயர்த்தப் பொது நிர்வாகம் மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

தரம் II இல் 15 வருட கால சேவை கால நிபந்தனையைப் பொறுத்தவரை சமுர்த்தி விசேட சேவை அலுவலர்கள் உட்பட ஏனைய சேவைகளில் இருந்து கிராம அலுவலர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டிருந்தால் அச் சேவைக் காலம் உள்ளடக்கப்படும் எனலாம்.

1977 ஆம் ஆண்டு நியமனம் பெற்று அரசியல் பழிவாங்கல் காரணமாக வேலையிழந்து 1995 ஆம் ஆண்டு மீண்டும் கிராம அலுவலகர் சேவையில் இணைந்தவர்களைப் பொறுத்தவரை 1977 ஆம் ஆண்டு முதல் அவர்களது சேவைக்காலம் அமையும் என்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த சேவை, நற்பெயர், பாராட்டுக்கள், பாராட்டுச் சான்றிதழ்கள், ஆக்கபூர்வமான பாராட்டுக்கள், சேவை மூப்பு, சேவை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நேர்முகப் பரீட்சை நடைபெற்றுப் புள்ளித் திட்டம் ஒன்றும் இப் பதவியுயர்வுக்காக அமுல்படுத்தப்படுகின்றது.

இதற்காக விண்ணப்பங்களை எதிர்வரும் 20.09.2010 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று வெளியான வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிட முடியும். (ச-5)

# மனித நேய நடைப் பயணம் செய்த சிவந்தன் நேற்று இலக்கையடைந்தார்

(ஜெனீவா)

ஈழத் தமிழர்களுக்கு நீதி வேண்டும் என்று கோரிப் பிரித்தானியத் தலைநகர் லண்டனிலிருந்து சுவிஸ்சர்லாந்தின் தலைநகர் ஜெனீவாவில் அமைந்திருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையை நோக்கி மனித நேய நடைப் பயணத்தை பல நாள்களாக மேற்கொண்டுள்ள சிவந்தன் நேற்று தனது இலக்கினை அடைந்து விட்டார்.

நேற்று மதியம் பிரான்ஸ் எல்லையில் இருந்து சுமார் 1.30 மணியளவில் சிவந்தனும் சுவிஸ் நாட்டில் கடந்த பல நாள்களாக நடைப் பயணத்தை மேற்கொண்ட மூன்று இளைஞர்களும் ஒன்றிணைந்தனர்.

அவர்களோடும் அங்கு குழுமியிருந்த தமிழ் மக்களோடும் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து பிற்பகல் 2.30 மணியளவில் ஐ.நா. முன்றலுக்குப் பேரணி வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து அங்கு அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. (ச-5)

## மேர்வின் சில்வாவிடம்...

ரித்தது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் குழு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் விசாரணைகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.மூவரை உள்ளடக்கிய இக் குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ஜெயந்த வீரசேகரவும் செயலாளராக ஓய்வு பெற்ற அரச சேவையாளர் மகிந்த சமரசேகரவும் உள்ளனர். மேல் நீதிமன்ற சட்டத்தரணி என். எம். சஹீட்டும் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றார். (ச-5)

## யாழில்...

கள் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இருவருக்குமிடையில் அங்கு இடம்பெற்ற பரஸ்பரப் பேச்சுக்களின் பலனாகவே இத் துணைத் தூதரகங்கள் அமைக்கப்படவுள்ளன என்று இந்தியத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப் புதிய துணைத் தூதரகங்கள் மூலம் இலங்கை-இந்திய உறவுகள் இன்னமும் நெருக்கமாகி விடும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ச-5)

## நாடாளு...

கூட்டத்தில் தான் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் சரத் பொன்சேகா கூறினார்.

இந்தக் குழுவில் தானும் ஒரு உறுப்பினர் எனவும் ஆனால் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இராணுவ அதிகாரிகள் உரிய நேரத்தில் தன்னை அழைத்து வரவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலிடத்து உத்தரவே இதற்குக் காரணம் எனவும் இதன் காரணமாக தனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டிருப்பதாகவும் மேலும் அவர் கூறினார். (ச-5)

# கனடா சென்ற அகதிகளில் விடுதலைப்புலிகள் இல்லை

## கனேடிய ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் விளைவாகவே அதிக எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதாக கனேடிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் கனடா சென்றுள்ள இலங்கை அகதிகள் தமிழீழ விடுதலைப்புலி எனக் குற்றம் சுமத்தப்படுகின்றமைக்கு எந்த ஆதாரமும் இல்லை என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாய்லாந்திலிருந்து இலங்கையர்களை ஏற்றிய அகதிகள் கப்பல் கனடா நோக்கிப் பயணிக்கின்றமை தொடர்பிலான தகவல் வெளியானதிலிருந்து இதுவரையில் பல்வேறு அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

இதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களே அகதிகள் என்ற போர்வையில் கனடா வந்துள்ளதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

இதற்கு முன்னர் ஓசியன் லேடி கப்பல் மூலம் கனடா வந்தவர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களே என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பினும் அதில் விடுதலைப்புலிகள் ஒருவரேனும் இருந்தமை நிரூபிக்கப்படவில்லை.

அதுபோன்றே தற்போது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள இலங்கை அகதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களாக இருக்க முடியாது என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கம் இதுவரையில் மேற்கொண்ட சிறுபான்மை மக்களுக்கு எதிரான பல்வேறு கொடுமைகளின் விளைவாகவே அங்கிருந்து பாரியளவிலான தமிழ்மக்கள் கனடாவுக்குத் தப்பி வருவதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கை அகதிப் படகு கனடாவை அண்மித்த பின்னர் அதனைத் திருப்பியனுப்பி இருக்க வேண்டும் எனக் கனடாவின் 63 சதவீதமான மக்கள் தெரிவித்துள்ளனர்.

புதிதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது. (ச-5)

## ராஜீவ்...

ராஜீவ் காந்தி பேச்சை கேட்டிருந்தால் இலங்கைத் தமிழர்கள் இவ்வளது பேர் அழிந்திருக்க மாட்டார்கள். இலங்கையில் 18 ஆண்டுகளுக்கு முன்னரே அமைதி திரும்பியிருக்கும்.

இலங்கைப் பிரச்சினை பற்றி பல ஆண்டுகள் மௌனமாக இருந்ததால்தான் தற்போது காங்கிரஸ் மீது சர்ச்சையை கிளப்பி விடுகின்றார்கள்.

சென்னை மந்தைவெளியில் காங்கிரஸ் கட்சி சார்பில் ராஜீவ் காந்தி பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

கூட்டத்தில் கருத்து வெளியிட்ட கார்த்தி, தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி கூட்டம் நடத்த தயங்கி வருகின்றது. பொதுக் கூட்டம் நடத்தாமல் காங்கிரஸ் கட்சியால் தமிழ்நாட்டில் வளர முடியாது.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சர்ச்சையைக் கண்டு அச்சக் கூடாது. தங்கள் நிலையை விளக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ச-5)

## பொலிஸ்...

நேற்று மாலை 6.30 மணியளவில் மட்டக்களப்பு ரயில் நிலையத்திற்குப் பாதுகாப்புக் கடமைக்காகச் சென்று கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியே பறிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் சார்ஜன்ட் செனவிரட்ன என்பவரின் துப்பாக்கியே இவ்வாறு பறிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கியைப் பறித்த மோட்டார் சைக்கிள் நபர்கள் புகையிரத நிலைய ஒழுங்கைக் கூடாகத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு ரயில் நிலையப் பிரதேசத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ச-5)

## இலங்கை அரசின் காய் நகர்த்...

மௌனம் இந்தியாவுக்கும் தமிழக மற்றும் தமிழீழ மக்களுக்கும் ஆபத்தான பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக பாக்கு நீரிணையிலும் அதனை அண்டிய கடற் பகுதிகளிலும் இலங்கையின் ஆயுதப் படைகளினால் தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் அவர்களது கடற்றொழில் உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுக் கடலில் வீசப்படுவதும் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழரின் ஆழ்ந்த கவலைக்கும் அக்கறைக்கும் உரிய விடயமாகியுள்ளது.

இலங்கைத் தீவில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையையும் தமிழக மீனவர்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதலும் சிங்களம் தமிழின மக்கள் மீது கொண்டுள்ள இன வஞ்சம் இலங்கைத் தீவின் எல்லைகளினையும் தாண்டி தமிழக மக்களையும் நோக்கி நீண்டிருப்பதானது இலங்கையின் எல்லைதாண்டிய ஒடுக்குமுறையின் கொடூர முகத்தினையும் அது தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள வெறுப்புணர்வினையுமே நிதர்சனமாக வெளிப்படுத்துகின்றது.

இந்தியாவுக்கும் இலங்கைத் தீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் மீன்பிடிக்கும் பாரம்பரிய உரிமையினையும் வாய்ப்பினையும் ஈழத் தமிழர்களிடமிருந்து பறித்தெடுத்த இலங்கை தற்போது இந்திய மீனவர்களினையும் அக் கடற்பரப்பினைப் பயன்படுத்த விடாமல் தடுப்பதும் சீன நிறுவனங்களுக்கு அக் கடற்பரப்பிலும் கரையோரங்களிலும் செயற்பட அனுமதிப்பதும் இந்து சமுத்திரத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

சீமான் தமிழக மீனவர்களுக்கும் தமிழீழ மக்களுக்குமாக எழுப்பும் ஆதரவுக்குரல் ஒடுக்கப்படும் மக்களுக்கு நியாயம் கோரும் வகையிலானது.

எல்லைதாண்டும் சிறிலங்காவை அச்சுறுத்தக் கூடியது. சீமான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை குறியீட்டு வடிவில் இலங்கை ஆட்சியாளர்கள் தமிழினத்துக்கு எதிராகத் தொடர்ந்தும் செயற்படுவதற்கு ஊக்கம் கொடுப்பதாக அமைந்து விடும் ஆபத்தையும் கொண்டுள்ளது.

எனவே தமிழக அரசு இவ்விடயத்தினைக் கருத்தில் கொண்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த சீமான் அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்காக ஆவன செய்ய வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டிக் கொள்கின்றது என்றார். (ச-5)

## எம்.வி. சன் சீ...

யர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சன் சீ கப்பலில் கட்டளையிடும் அதிகாரி மற்றும் கப்டனாகச் செயற்பட்டவர் கப்டன் வினோத் என்ற பெயரில் புலிகளுடன் நெருக்கமாகச் செயற்பட்டவர் ஆவார்.

மலேசியாவில் கல்வி கற்ற இவர் 1990-2009 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு ஆயுதங்களைக் கொண்டு செல்லும் விடயத்தில் புலிகள் இயக்கத்தின் கப்டன் கமலுடன் இணைந்து செயற்பட்டவர்.

ஓசியன் லேடி கப்பலுக்கு கமல் கப்டனாகச் செயற்பட்டு அக் கப்பல் கடந்த ஒக்டோபரில் கனடாவை வந்தடைந்த பிறகு அந்த நாட்டு அரசாங்கம் காட்டிய தளர்வுப் போக்குக் காரணமாக தாய்லாந்தில் சன் சீ கப்பலை வாங்கும் பணிகளில் வினோத் ஈடுபட்டுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## செப்ரெம்பர் மாத இறுதிக்குள்...

அவர் இது குறித்து முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு,

செப்ரெம்பர் மாத இறுதிப் பகுதிக்குள் மீள் குடியேற்றங்கள் அனைத்தும் பூர்த்தியாகி விடும் என நாம் நம்புகின்றோம்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 28 ஆயிரம் பேர் வரையானோரை மாத்திரம் அவரவர் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வேண்டியுள்ளது.

வட மாகாணத்தின் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் 95 சதவீதமான மீள் குடியேற்றங்கள் பூர்த்தியாகி விட்டன.

உள்நாட்டு யுத்தங்களால் பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்திருக்கும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மிக வேகமாக அமைகின்றமை கண்கூடு என்றார்.

இதேவேளை வட பகுதியில் இடம்பெயர்ந்த நிலையில் இருந்தவர்களில் 90 சதவீதமானவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களும் எதிர்வரும் சில மாதங்களில் குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

உலக மனிதாபிமான சர்வதேச தினத்தையொட்டி நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிப்படைந்தவர்களுக்கே தாம் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டி வரும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-3,5)

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில்...

திரம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.உதவிப் பிரதேச செயலாளர், யாழ். மாநகர பிரதி முதல்வர், சகல திணைக்களங்கள், சபைகள் மற்றும் அதிகார சபைகள் ஆகியவற்றின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், மாதர் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பெருந்தொகையானோர் இக் கூட்டத்தில் பங்கு கொண்டனர்.

யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம் மற்றும் பயிர் வளர்ப்பு உள்ளிட்ட விவசாயத்துறை, பொதுச் சுகாதாரம், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, குடிநீர் வசதிகளும் விநியோகமும், வீதி அபிவிருத்தி, மின்சார விநியோகம், வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் பொது வசதிகள் உள்ளிட்ட விடயங்கள் தனித் தனியாக ஆராயப்பட்டு அபிப்பிராயங்கள் பெறப்பட்டு அந்தந்த துறைசார் அதிகாரிகளின் விளக்கங்களும் பெறப்பட்டன.

அத்துடன் ஏனைய துறைகள் குறித்தும் அதன் மேம்பாட்டு நடவடிக்கைகள் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் தனித்தனியாக ஆராயப்பட்டன.

இக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடுத்த மூன்று மாத காலத்திற்குள் சுத்தமான யாழ்.நகர் என்ற இலக்கோடு செயற்பட அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு விடுத்தார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.